بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلی علی رسولہ الکریم　　وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 3

இதழ் 49

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

27 ரபீவுல் அவ்வல் 1440 ஹிஜ்ரி கமரி 06 ஃபதஹ் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
06 டிசம்பர் 2018


## அல்லாஹ்வின் கட்டளை

لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا اِلَّا وُسْعَهَا ؕ لَهَا مَا كَسَبَتْ وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ ؕ رَبَّنَا لَا تُؤَاخِذْنَاۤ اِنْ نَّسِيْنَاۤ اَوْ اَخْطَاْنَا ۚ

அல்லாஹ் எவனுக்கும், அவனுடைய தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பைச் சுமத்துவதில்லை. அவன் சம்பாதித்த (நன்மையான)து அவனுக்கே. அவன் சம்பாதித்த (தீமையான)து அவனுக்கே. எங்கள் இறைவா! நாங்கள் மறந்து விட்டாலோ, தவறிழைத்தாலோ நீ எங்களைத் தண்டிக்காதிருப்பாயாக. (2:287)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**நீங்கள் நீண்ட வயதுடன் வாழவும் இறைவனுடைய அருட்கொடையைப் பெறவும் தூய்மையானவர்களாக மாறி விடுங்கள். வரம்பு மீறிச் சிற்றின்பத்தில் வாழ்க்கை நடத்துவது சாபத்தற்குரிய வாழ்க்கையாகும். வரம்பு மீறி தீய நடத்தையுடன் செயல்படுவதும் தான்தோன்றித்தனமாய் நடப்பதும் சாபத்திற்குரிய வாழ்க்கையாகும். வரம்புமீறி இறைவனோடும் அல்லது அவனது அடியார்களோடும் நேசபாசமில்லாமல் அலட்சியமாக இருப்பதும் சாபக்கேடான வாழ்க்கையேயாகும்**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...

நீங்கள் நீண்ட வயதுடன் வாழவும் இறைவனுடைய அருட்கொடையைப் பெறவும் தூய்மையானவர்களாக மாறி விடுங்கள். வரம்பு மீறிச் சிற்றின்பத்தில் வாழ்க்கை நடத்துவது சாபத்தற்குரிய வாழ்க்கையாகும். வரம்பு மீறி தீய நடத்தையுடன் செயல்படுவதும் தான்தோன்றித்தனமாய் நடப்பதும் சாபத்திற்குரிய வாழ்க்கையாகும். வரம்புமீறி இறைவனோடும் அல்லது அவனது அடியார்களோடும் நேசபாவமில்லாமல் அலட்சியமாக இருப்பதும் சாபக்கேடான வாழ்க்கையேயாகும். இறைவனுக்கும் மனிதர்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றி ஒரு யாசகரிடம் கேட்கப்படுவது போல் ஒவ்வொரு செல்வந்தனிடமும் இறைவனால் கேட்கப்படும். இன்னும் சொல்லப்போனால் அதைவிட அதிகமாகக் கேட்கப்படும்.

இக்குறுகிய வாழ்க்கையை நம்பி இறைவனை விட்டும் முழுமையாக முகம் திரும்பக் கூடியவன் எத்தகைய துர்பாக்கியவனாயிருக்கிறான். இறைவனால் விலக்கப்பட்டவற்றை அவனுக்கு இறைவனால் ஆகுமானதாக்கப்பட்டது போல் சிறிதும் அச்சமில்லாமல் உபயோகித்து வருகிறான். ஆவேசம் வரும்போது பைத்தியக்காரர்களைப் போல் பிறரைப் பழித்துரைக்கிறான். சிலரை அடித்துக் காயப்படுத்துகிறான். சிலரைக் கொலை செய்திடவும் ஆயத்தமாகிறான். தன் காமவெறியை நிறைவேற்ற வெட்கக்கேடான முறைகளின் எல்லையையே தாண்டி விடுகின்றான். ஆகவே அவன் உண்மையான சுகவாழ்வைப் பெறாமலேயே மரணமாவான்.

அன்பிற்குரியவர்களே! நீங்கள் சில நாட்களுக்காக இவ்வுலகிற்கு வந்திருக்கிறீர்கள். அவற்றில் பெரும்பாலான நாட்கள் கடந்து விட்டன. ஆகவே நீங்கள் உங்களது எஜமானனைச் கோபப்படுத்த வேண்டாம். உங்களை விடச் சக்திமிக்க ஓர் அரசுக்கு உங்களோடு பகை ஏற்பட்டால் அது உங்களை அழித்து விட முடியுமல்லவா? இவ்வாறிருக்க இறைவனின் வெறுப்பிலிருந்து உங்களால் எவ்வாறு தப்ப இயலும் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் இறைவனது பார்வையில் இறையச்சமுடையவர்களாக இருந்தால் உங்களை எவராலும் அழித்து விட முடியாது. இறைவனே உங்களைப் பாதுகாத்து வருவான்.

உங்களைக் கொலை செய்யும் பொருட்டு உங்களைப் பின் தொடரக் கூடியவனால் உங்களை எதுவும் செய்து விட முடியாது. இல்லாவிடில் இறைவனைத்தவிர உங்களது உயிரைப் பாதுகாக்கிறவன் வேறு யாருமில்லை; மேலும் நீங்கள் உங்களை பகைவர்களுக்குப் பயந்தும் அல்லது வேறு ஆபத்துக்களில் சிக்கியும் நிம்மதியிழந்தவர்களாக வாழ்வீர்கள். அது மட்டுமல்லாமல் உங்கள் வாழ்க்கையின் இறுதி நாள் பெரும் துன்பத்திலும் துயரத்திலுமே கழியும்.

எவர்கள் இறைவனோடு இருக்கிறார்களோ அவர்களுக்காகவே அவன் பாதுகாவலனாகி விடுகிறான். ஆகவே நீங்கள் இறைவன் பக்கம் வாருங்கள். அவனோடுள்ள ஒவ்வோர் எதிர்ப்பையும் விட்டு விடுங்கள். அவனுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதில் எவ்விதச் சோம்பலையும் காட்டாதீர்கள். அவனது படைப்பினங்களுக்கு நாவைக் கொண்டோ அல்லது கரங்களைக் கொண்டோ அநியாயம் செய்யாதீர்கள்.

மேலும் வானத்தின் கோபத்திற்கும் ஆக்கினைக்கும் அஞ்சிக் கொண்டிருங்கள். இதுவே உங்களின் இரட்சிப்பிற்கான சரியான மார்க்கமாகும். இஸ்லாமிய அறிஞர் பெருமக்களே! என்னைப் பொய்ப்படுத்துவதற்கு நீங்கள் அவசரப்படாதீர்கள். ஏனெனில் மனிதனால் விரைந்து புரிந்து கொள்ள முடியாத இரகசியங்கள் பெருமளவில் இருக்கின்றன. ஒரு விஷயத்தை செவிமடுத்த அதே

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**தஹ்ரீகே ஜதீதின் 84 வது ஆண்டில் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு 1 கோடியே 27 லட்சத்து 93 ஆயிரம் பவுண்ட்ஸ் அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்துள்ளது**

**உலக அளவில் ஜமாஅத்துகளின் தகுதியின் அடிப்படையில் பாகிஸ்தான் முதலிடத்தில் உள்ளது. பிறகு ஜெர்மனி பிறகு அமெரிக்கா**

**தனி நபர் விகிதாச்சாரத்தின் படி முறையே சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, யூ.கே, சிங்கப்பூர், சுவீடன், பெல்ஜியம், கனடா பின்லாந்து உள்ளன**

**ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் கானா. பங்கு பெறுபவர்களின் அடிப்படையில் ஆப்ரிக்காவில் நைஜீரியா. பெரிய ஜமாஅத்துகளில் இந்தோனேஷியா முதலிடத்தில் உள்ளது**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 09 நவமபர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **09 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

مَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ كَمَثَلِ حَبَّةٍ اَنْۢبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِيْ كُلِّ سُنْۢبُلَةٍ مِّائَةُ حَبَّةٍ ؕ وَاللّٰهُ يُضٰعِفُ لِمَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ ○ اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ ثُمَّ لَا يُتْبِعُوْنَ مَآ اَنْفَقُوْا مَنًّا وَّلَآ اَذًى ۙ لَّهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ۚ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

وَمَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ وَتَثْبِيْتًا مِّنْ اَنْفُسِهِمْ كَمَثَلِ جَنَّةٍۢ بِرَبْوَةٍ اَصَابَهَا وَابِلٌ فَاٰتَتْ اُكُلَهَا ضِعْفَيْنِ ۚ فَاِنْ لَّمْ يُصِبْهَا وَابِلٌ فَطَلٌّ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ

اَلشَّيْطٰنُ يَعِدُكُمُ الْفَقْرَ وَيَاْمُرُكُمْ بِالْفَحْشَآءِ ۚ وَاللّٰهُ يَعِدُكُمْ مَّغْفِرَةً مِّنْهُ وَفَضْلًا ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ

لَيْسَ عَلَيْكَ هُدٰىهُمْ وَلٰكِنَّ اللّٰهَ يَهْدِيْ مَنْ يَّشَآءُ ؕ وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ فَلِاَنْفُسِكُمْ ؕ وَمَا تُنْفِقُوْنَ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ اللّٰهِ ؕ وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ يُّوَفَّ اِلَيْكُمْ وَاَنْتُمْ لَا تُظْلَمُوْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ۚ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

நான் ஓதிய வசனங்கள் சூரா பக்கராவின் வசனங்களாகும். இவற்றில் பொருள் தியாகம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பொருள் தியாகம் குறித்து கிட்டத்தட்ட தொடர்ந்து அல்லாஹ் இங்கு விளக்கியுள்ளான். அவற்றின் பொருள் இவ்வாறாகும்.

தங்கள் செல்வங்களை அல்லாஹ்வின் வழியில் செலவிடுகின்றவர்களுக்கு ஒரு தானியம் உதாரணமாகும். அது ஏழு கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொரு கதிரிலும், நூறு தானியங்கள் இருக்கும். மேலும் அல்லாஹ், தான் நாடியவருக்கு அதிக (மதிக)மாகக் கொடுக்கின்றான். மேலும் அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனும் ஆவான். தங்கள் செல்வங்களை அல்லாஹ்வின் வழியில் செலவிட்டுப் பின்னர் தாம் செலவு செய்தது குறித்து எவ்வகையிலும் உபகாரத்தை நினைவூட்டாமலும், எவ்விதத்திலும் துன்பத்தைக் கொடுக்காமலும் இருப்போருக்கு, அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உண்டு. மேலும் அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படாது; மேலும் அவர்கள் கவலையடையவும் மாட்டார்கள். (2:262, 263)

தங்களுடைய செல்வங்களை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவும், தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ளவும் செலவு செய்பவர்களின் உதாரணம், உயரமான இடத்திலுள்ள ஒரு தோட்டத்திற்கு ஒப்பானது. அதன் மீது பெருமழை பொழிகின்றபோது, அது தனது கனியை இரு மடங்காகத் தருகின்றது. மேலும் அதன் மீது பெருமழை பெய்யவில்லையாயினும், மிகவும் குறைவான மழையே (அதற்குப் போதுமானது). நீங்கள் செய்து கொண்டிருப்பதை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான். (2:266)

ஷய்த்தான் உங்களை வறுமைக்கு அஞ்சுமாறும், வெட்கக் கேடானதை உங்களுக்குத் தூண்டவும் செய்கிறான். மேலும் அல்லாஹ்வோ தன்னிடமிருந்து ஒரு பெரும் மன்னிப்பையும், பேரருளையும் உங்களுக்கு வாக்களிக்கின்றான். மேலும் அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், நன்கு அறிபவனும் ஆவான். (2:269)

அவர்களை நேர்வழிக்குக் கொண்டு வருவது உமது பொறுப்பு அன்று. மாறாக, அல்லாஹ், தான் விரும்புவோருக்கு நேர்வழி காட்டுகின்றான். உங்கள் நல்ல செல்வத்திலிருந்து எதைச் செலவு செய்தாலும் அது உங்களுக்கே (நன்மை தரும்). நீங்கள் அல்லாஹ்வின் விருப்பத்தை நாடியல்லாமல் செலவு செய்வதில்லை. செல்வத்திலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்தாலும் அது முழுமையாக உங்களுக்குத் திருப்பித் தரப்படும். மேலும் உங்களுக்கு அநீதி இழைக்கப்பட மாட்டாது. (2:273)

தங்களுடைய செல்வங்களை இரவிலும், பகலிலும், மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் (அல்லாஹ்வின் வழியில்) செலவு செய்பவர்களுக்கு, அவர்களின் இறைவனிடம் அவர்களுக்குரிய கூலி (பாதுகாக்கப்பட்டு) உள்ளது. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை; அவர்கள் கவலையடையவும் மாட்டார்கள். (2:275)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பொருள் தியாகம் குறித்து குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

நான் மீண்டும் மீண்டும் கவனமூட்டுகின்றேன். அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள். அது அல்லாஹ்வின் கட்டளையாகும். இஸ்லாம் பிற எதிர் மதங்களால் வேட்டையாடப்படுகிறது. இஸ்லாத்தின் பெயரையும் அடையாளத்தையும் கூட அழித்து விட வேண்டும் என்று விரும்புகின்றனர். இந்த நிலை ஏற்பட்ட பிறகு இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக அடி எடுத்து வைக்க

வேண்டாமா? இறைவன் இந்த நோக்கத்திற்காகவே இந்த இயக்கத்தை உருவாக்கினான். எனவே, இந்த வளர்ச்சிக்காக உழைப்பது அல்லாஹ்வின் கட்டளையையும் விருப்பத்தையும் நிறைவேற்றுவதாகும். இந்த வாக்குறுதியும் கூட இறைவன் புறமிருந்தே வழங்கப்பட்டுள்ளது. எவர் அல்லாஹ்வுக்காக வழங்குவாரோ அவருக்கு நான் சில மடங்கு அதிகமாக்கியே தருவேன். உலகிலேயே அதிகமாக கிடைக்கவும் செய்யும். மரணத்திற்குப் பிறகு மறுமையின் நற்கூலியையும் பார்ப்பார். அவருக்கு எத்தகைய நிம்மதி கிடைக்கிறது என்று பார்ப்பார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 393,394 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் களங்கமற்ற மக்களைக் கொண்ட ஒரு ஜமாஅத்தை வழங்கினான். அம்மக்கள் அன்னாரின் வார்த்தைகளைக் கேட்டார்கள்; செய்கிறோம் என்றனர்; தியாகமும் செய்தனர்.

இந்த வகையில் அந்த தியாகங்கள் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நமது ஜமாஅத்தின் பெரும் பகுதி மக்கள் ஏழைகளாக இருந்தும், அல்லாஹ்வுக்கு நன்றி! ஏழைகளைக் கொண்ட ஜமாஅத்தாக இருந்தும் கூட நாம் பார்க்கிறோம். அவர்களிடம் உண்மைத் தன்மை உள்ளது. அவர்கள் இஸ்லாத்தின் தேவையைப் புரிந்து கொண்டு முடிந்தவரை செலவு செய்வதில் எந்த பாகுபாடும் காட்டுவதில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 25 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் உருவாக்கப்பட்ட ஜமாஅத்தை அவர்களின் வாழ்விலேயே மட்டும் தியாகங்களிலும் களங்கமின்மை மற்றும் பற்று, விசுவாசத்தில் முன்னேற்றவில்லை. மாறாக, அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப இன்றிலிருந்து ஏறத்தாழ 130 வருடங்கள் முன்பு இந்த ஜமாஅத்தை நிலைநாட்டினான். 130 வருடங்கள் கழிந்த பிறகும் கூட ஜமாஅத்தில் அத்தகைய தியாகம் செய்யக் கூடிய மாசற்ற மக்களை வழங்கி வந்தான்; வழங்கிக் கொண்டிருக்கிறான். அவர்கள் மார்க்கத்திற்காக தமது சக்திக்கேற்ப பல நேரங்களில் தமது சக்திக்கு மீறியும் கூட தியாகம் செய்கின்றனர். மேலும் அதன் முழு தகுதியை நிறைவேற்றுகின்றனர். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ள வாக்குறுதியிலிருந்து பங்கு பெறுகின்றனர்.

இந்த தகுதி அல்லாஹ்வின் அருளால் இன்று முழுக்க முழுக்க ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் நிலைநாட்டப்பட்ட இந்த ஜமாஅத்தில் மட்டுமே காண முடிகிறது. அதற்குச் சில உதாரணங்களை இக்காலத்திலிருந்து எடுத்து வைக்கிறேன். இந்த சம்பவங்கள் உலகில் பல நாடுகளில் அம்மக்கள் செய்தவையாகும். அவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தந்து தமது பொருளை எடுத்து வைப்பதற்கு எப்போதும் தயார் என்ற தமது வாக்குறுதியை நிறைவேற்றுகின்றனர்.

இந்த வகையில் முதல் சம்பவமாக கேமரூனில் நடந்தது. அங்குள்ள முஅல்லிம் எழுதுகிறார்:

கேமரூனில் மேற்கு மண்டலத்திலுள்ள ஒரு ஜமாஅத்தான மார்த்தாவில் தஹ்ரீகே ஜதீது சந்தா வசூலிப்பதற்காகச் சென்றபோது அங்குள்ள சீஃப் சஹான் உஸ்மான் சாஹிப் அங்குள்ள மக்களை அதற்காக ஆர்வமூட்டினார்கள். அவர் கூறினார்: ஜமாஅத்தின் முஅல்லிம் சாஹிப் தஹ்ரீகே ஜதீதிற்காக வந்துள்ளார். அனைவரும் இந்தப் பொருள் தியாகத்தில் பங்கு பெறுங்கள். ஏனெனில் இன்றிலிருந்து இரண்டு வருடங்களுக்கு முன்பு என்னுடன் 2–3 நபர்கள் பள்ளிவாயில் தொழுது வந்தார்கள். ஆனால் இந்த இடத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்ட பிறகு நாம் இந்த ஜமாஅத்தை ஏற்றுக் கொண்ட பிறகு நமது மஸ்ஜிது தொழுகையாளிகளால் நிறைந்து விட்டது. சில வேளைகளில் தொழுகையாளிகளுக்கு பள்ளிவாயிலினுள் இடம் இல்லாத காரணத்தால் வெளியில் தொழ வேண்டியது ஏற்பட்டுள்ளது. இந்த தெளிவான மாற்றமே கூறுகிறது. இந்த மாற்றங்கள் இங்கு அஹ்மதிய்யா ஜமாஅத் வந்ததனால்தான் ஏற்பட்டுள்ளது.

எனவே நாம் ஜமாஅத்தின் ஒவ்வொரு திட்டத்திலும் பங்கு பெற வேண்டும். இந்த மாற்றம் அஹ்மதிய்யத்தினால் வந்து கொண்டிருக்கிறது. இறை வணக்கத்தில் முன்னேறுங்கள். பொருள் தியாகத்தில் முன்னேறுங்கள். இது ஒரு வியத்தகு புரட்சி ஆகும். இவை அனைத்தும் பழைய அஹ்மதிகளுக்கும் கூட கவனமூட்டக் கூடிய விஷயமாகும். அவர்களில் எவருக்கு இறைவணக்கத்தில் கவனம் குறைவாக இருந்து, நல்ல நிலைமை இருந்தும் கூட பொருள் தியாகத்தில் கவனம் குறைவாக இருக்கிறதோ அவர்களும் கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

பிறகு கேமரூனிலேயே ஒரு முஅல்லிம் அபூபக்ர் கூறுகிறார்:

கேமரூனின் வட கோடியிலுள்ள ஜமாஅத் மதிப்பூவில் தஹ்ரீகே ஜதீது சந்தாவுக்காக செல்லும் போது புதிதாக பைஅத் செய்தவர்களிடம் சந்தா பற்றித் தூண்டப்பட்டது. அப்போது அங்கிருந்த உஸ்மான் சாஹிப் கூறினார். நான் சென்ற முறை தஹ்ரீகே ஜதீது சந்தாவுக்காக 10 ஆயிரம் ஃபிராங்க் ஷிஃபா (CFA Frank) வழங்க வேண்டும் என்று சென்ற முறையே நினைத்தேன். ஆனால் அதற்குச் சில நாட்களுக்குப் பிறகு எனது மகன் Custom Department –ல் வேலைக்கான நேர்காணல் நடக்க இருப்பதாகக் கூறினான்.

ஆனால் அதற்கு அதிகமான பணம் தேவைப்பட்டது. அங்கும் கூட மூன்றாம் உலக நாடுகளிலுள்ள சில நாடுகளைப் போன்று வேலை வாங்குவதற்கு கூட பணம் கொடுக்க வேண்டியதிருந்தது. நான் எனது மகனிடம், நான் ஏழை ஆவேன். இத்தனை பெரிய தொகையை என்னால் ஏற்பாடு செய்ய இயலாது. என்னிடம் 10 ஆயிரம் ஃபிராங்க் ஷிஃபா பணம் இருந்தது. ஆனால் அதனை தஹ்ரீகே ஜதீது திட்டத்திற்கு வழங்குவதாக வாக்களித்துள்ளேன். எனவே நீ சென்று வேலைக்கான நேர்காணலில் கலந்து கொள். இறைவன் உனக்கு உதவி செய்வான் என்று கூறினேன்.

உஸ்மான் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:

நான் அந்த சந்தாவைக் கொடுத்து விட்டேன். சில நாட்களிலேயே எனது மகனிடமிருந்து, நான் நேர்காணலில் தேர்ச்சி பெற்று விட்டேன் என்று போன் வந்தது. விரைவில் பணி கிடைத்து விடும் என்றும் கூறினான். இவ்வாறு நேர்காணல் செய்பவர்களின் உள்ளத்தை அல்லாஹ் திருப்பினான். பணம் கொடுக்கத் தயாராக இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. ஆனால் அவரது மகனுக்கு அவரது நிய்யத் மற்றும் தியாகத்தின் விளைவால் அல்லாஹ் வேலைக்கான ஏற்பாடு செய்தான்.

பிறகு கேம்பியாவின் அமீர் சாஹிப் எழுதுகிறார்:

நியாமி மாவட்டத்தின் ஓர் ஊரில் தஹ்ரீகே ஜதீது சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தோம். அதில் காலத்தின் கலீஃபா இவ்வாறு கூறியுள்ளார்கள். புதிதாக பைஅத் செய்தவர்களும் இதில் பங்கு பெற வேண்டும் என்று கூறியுள்ளார்கள் என்று கூறப்பட்டது. உடனே அங்கிருந்த எல்லாரும் சந்தாக்களை வழங்கினார்கள்.

ஒரு பெண் ருஜப் ஆயிஷா சாஹிபா கூறினார்கள்:

அந்த கூட்டத்தில் அவர் 20 டாலசி (Dalasi) சந்தா வழங்கினார். அவரிடம் 20 ஃபிராங்க் ஷிஃபாதான் இருந்தது. அதனை இக்கட்டான சூழ்நிலைக்காக வைத்திருந்தார். அப்பெண் வீட்டிற்குச் சென்றபோது ஒரு விருந்தாளி அவருக்கு 500 ஃபிராங்க் ஷிஃபா வழங்கினார். எனவே அவர் திரும்ப பள்ளிவாயிலுக்கு வந்து மேலும் 50 ஃபிராங்க் ஷிஃபா சந்தா வழங்கி, இந்தப் பணம் எனக்கு சந்தாவின் பரக்கத்தினால் மட்டுமே கிடைத்தது.

அல்லாஹ்வின் அதிகரித்து தரும் வாக்குறுதி அவரது ஈமான் மற்றும் திட நம்பிக்கையில் முன்னேற்றம் ஏற்படக் காரணமாக அமைந்தது. அல்லாஹ் திருப்பித் தந்து விடுவான் என்று எதிர்பார்த்து அவர்கள் சந்தா வழங்கவில்லை. ஆனால் உடனடியாகவும் கிடைத்து விடுகிறது. அல்லாஹ் வீணாக தாமதமப்படுத்துவதுமில்லை.

பிறகு பெனின் மண்டலத்தின் கோய்கோவின் முபல்லிக் எழுதுகிறார்:

அந்த நகரத்தின் சந்தா செயலரின் வருமானத்திற்காக பயன்பட்டு வந்த மூன்று சக்கர மோட்டார் ரிக்ஷா அல்லது வண்டி திருடு போய் விட்டது. ஆப்பிரிக்காவில் பொதுவாக திருடு போய் விட்டால் திரும்பக் கிடைப்பது நடக்க முடியாத ஒன்றாகும். அவரது நண்பர்கள் அவரைச் சந்திக்க வந்தபோது மிகவும் அனுதாபப்பட்டார்கள். அவரது தவக்குலின் நிலையைப் பாருங்கள்.

அவர் கூறினார்: நான், எனது முழு நம்பிக்கையையும் இறைவனிடம் வைத்துள்ளேன். நான் ஓர் ஏழை மனிதன். இந்த மோட்டார் சைக்கிள் மூலம் சம்பாதித்து எனது குழந்தைகளின் வயிற்றுக்கு உணவும், அதிலிருந்தே சந்தாவும் வழங்குகிறேன். எனவே என்னை விட்டு வேறு எவருக்கேனும் சற்று அதிகமாக தேவை இருந்தால் அதனை அல்லாஹ் தற்காலிகமாக அகற்றிய பிறகு அவரது தேவையை நிறைவேற்றி விட்டு என்னிடம் திருப்பித் தந்து விடுவான்.

இதனைக் கேட்டு மக்கள், திருடு போனதால் இவரது கடும் அதிர்ச்சியினால் மூளை பாதிக்கப்பட்டு விட்டது என்றுகூறினர். எவ்வாறிருப்பினும் நாட்டின் சட்டத்தின்படி போலீஸில் ரிப்போர்ட் செய்து விட்டு வீட்டில் வந்து அமைதியாக அமர்ந்து விட்டார்.

அவர் கூறுகிறார்: காலம் சென்றதது. என்னுடன் மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்த அண்டை வீட்டுக்காரர் பனவ் சாஹிப், நான் உமது மோட்டார் சைக்கிள் ரிக்ஷாவை பார்த்தேன். ஆனால் அதன் நிறம் மாறியுள்ளது என்று போன் செய்தார். இந்த வகையில் போலீஸுக்கு தகவல் தரப்பட்டது. போலீஸ், மோட்டார் சைக்கிளின் பேப்பர்களை எடுத்துக் கொண்டு ஸ்டேஷன் வருமாறு கூறினார். காதிதங்களை பார்த்த பிறகு அவர் திருடியது தெரிந்தது.

உடனே போலீஸ் திருடியவரிடம், இரண்டு நாளில் மோட்டார் சைக்கிளை சரிசெய்து நிறத்தையும் பழைய நிலைக்கு கொண்டு வந்து உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறி விட்டனர். இவ்வாறு அவரது மோட்டார் சைக்கிள் திரும்ப கிடைத்தது. மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு உடனேயே மிஷன் ஹவுஸ் வந்தார். எல்லா சம்பவங்களையும் கூறினார். அத்துடன் எனது தஹ்ரீகே ஜதீது சந்தா பாக்கி உள்ளது. நான் பணிக்காகத் தேடிச் செல்கிறேன்.

இந்த வாரத்தில் எவ்வளவு இலாபம் கிடைக்குமோ அதனை சந்தாவாக வழங்கி விடுவேன் என்றார். சந்தாவின் பரக்கத்தினால்தான் எனக்கு இந்த மோட்டார் சைக்கிள் திரும்பக் கிடைத்தது என்றார். இந்த வகையில் அவர் ஒரே வாரத்தில் 12 ஆயிரம் ஃபிராங்க் ஷிஃபா சந்தாவாக தஹ்ரீகே ஜதீதிற்கு வழங்கி விட்டார். இதுவும் அல்லாஹ்வின் மீது தவக்குல் மற்றும் ஈமானின் வியத்தகு உதாரணமாகும்.

இந்தியாவிலிருந்து தஹ்ரீகே ஜதீது இன்ஸ்பெக்டர் சிஹாப் சாஹிப் எழுதுகிறார்:

சின்த்தகுண்டா அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒரு சிறிய பெண் சோபியா பேகம் தனது சகோதரர் மூலம் தூது அனுப்பினார். நான் சிறுமியாக இருக்கும்போது தாயாருடன் மாநாட்டிற்கு சென்று வந்தேன். கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் சொற்பொழிவுகளைக் கேட்டேன். முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீதின் அடிக்கல் நாட்டினார்கள். பொருள் தியாகம் குறித்து தூண்டினார்கள். நிறைய பணியாளர்கள் தமது நகைகளை ஹுஸூரிடம் வழங்கினார்கள் என்று கூறினார்கள். நான் இந்த சம்பவங்களைக் கேட்டபோது எனது உள்ளத்தில் எண்ணம் ஏற்பட்டது.

அந்தோ! என்னிடம் நகை இருந்தால் நானும் தஹ்ரீகே ஜதீது சந்தாவை வழங்கியிருப்பேனே? ஆனால் ஏழ்மையின் காரணமாக அது எனக்கு முடியாததாக உள்ளது. ஆனால் எனது தாயாரின் வஃபாத்திற்குப் பிறகு அவர் விட்டுச் சென்ற இரண்டு தோலா தங்கம் எனக்கு கிடைத்தது. அதனை எடுத்து வைக்கிறேன் என்றார். அதற்குப் பிறகு அவரிடம் வேறு நகை இருந்ததா? இல்லையா? என்பது தெரியவில்லை.

அவர் கூறுகிறார்: நான் அவருக்கு புரிய வைத்தேன். அதாவது இன்ஸ்பெக்டர் சாஹிபும் மக்களும் புரிய வைக்க நினைத்தனர். உனக்கு திருமணமாக உள்ளது. நகை தேவையாக இருக்கும். ஆனால் அச்சிறுமி ஏற்கவில்லை. இரு தோலா தங்கத்தின் தொகையை தஹ்ரீகே ஜதீதிற்கு வழங்கி விட்டார்.

நான் இதனை கடந்த நாட்களில் அமெரிக்காவிலும் கூறினேன். ஏழைகள் பொருள் தியாகம் செய்கின்றனர். ஆனால் நல்ல நிலையிலுள்ள பணக்காரர்கள் தமது நிலை, தமது தியாகத்தின் தரம் எவ்வாறு உள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும். அல்லாஹ் கூறிய அளவில் அவர்களின் தியாகம் இருக்க வேண்டும். பிறகு அல்லாஹ் அதனை ஏற்றுக் கொள்கிறான்.

இந்தியாவில் கர்நாடகா மாநிலத்தின் தஹ்ரீகே ஜதீது இன்ஸ்பெக்டர் கூறுகிறார்:

ஒரு நண்பர் தஹ்ரீகே ஜதீது சந்தாவாக 2500 ரூபாய் எழுதியிருந்தார். அவரிடம் அதனை வழங்குமாறு கேட்கப்பட்டது. தஹ்ரீகே ஜதீது வருடம் முடிவடைய சில நாட்களே உள்ளன என்றபோது, அவர், மழையின் காரணமாக கடந்த மூன்று மாதங்களாக பணி முற்றிலும் இல்லாமல் போய் விட்டது. வருமானத்திற்கு எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாமல் இருக்கிறது என்றார். உடனே நான் அவரிடம், தருவதற்கு விருப்பம் கொள்ளுங்கள். துஆ கேளுங்கள் என்று கூறி விட்டு அடுத்த இடத்திற்குச் சென்று விட்டேன். மாலையில் வேறிடத்திலிருந்து திரும்பியபோது அம்மனிதர் தாமே மிஷன் ஹவுஸிற்கு வந்தார். தமது முழு சந்தாவையும் வழங்கினார். நான் இது எவ்வாறு நடந்தது என்று கேட்டேன்.

நான் சந்தா வழங்க வேண்டும் என்று விரும்பியதன் பரக்கத்தாலும் அல்லாஹ்வின் அருளாலும் நான் துஆ செய்தேன். சில காலத்திற்கு முன் ஒருவர் சிறிது பணம் தர வேண்டியதிருந்தது. நான் பல மாதங்கள் அவரைச் சுற்றி வருகிறேன். தரவில்லை. ஆனால் இன்று அவர் திடீரென்று என் வீட்டிற்கு வந்து என் பணத்தைத் திருப்பித் தந்து விட்டார்.

பிறகு தன்ஸானியாவிலிருந்து முஅல்லிம் மூஸா சாஹிப் எழுதுகிறார்:

தாருஸ் ஸலாம் ஜமாஅத்தின் மிக மிக களங்கமற்ற மனிதர். ஜமாஅத்தின் அலுவலகத்தில் பணி செய்கிறார். அவர் ஒவ்வொரு வருடமும் தமது மற்றும் குடும்பத்தின் தஹ்ரீகே ஜதீது வாக்குறுதியை ரமலானுக்குள் கொடுக்க வேண்டும் என்று முயற்சி செய்து வந்தார். ஆனால் இவ்வருடம் வீட்டிலுள்ள சில பிரச்சனைகளால் கொடுக்க முடியவில்லை. எனவே அவர் மிகவும் அதற்காக வருடத்தப்பட்டார். எவ்வாறிருப்பினும், அவர் அல்லாஹ்வே! எனக்காக ஒரு வழியை ஏற்படுத்துவாயாக என்று துஆ செய்தார். ஈது சமயத்தில் ஜமாஅத்திலிருந்து ஈது ஃபண்ட் கிடைக்கிறது.

ஜமாஅத்தின் சேவகர்களுக்கு ஈது அன்பளிப்பு வழங்கப்படுகிறது. ஈதிற்கான அந்த தொகையை தமது தேவையை நிறைவேற்றுவதற்குப் பதிலாக சந்தாவிற்காக கொடுத்து விட வேண்டும் என்று நினைத்தார். ஆனால் அவர் கணக்கெடுத்தபோது ஈது அன்பளிப்பாக கிடைக்கும் தொகையை செலுத்திய பிறகும் சந்தா பாக்கி இருக்கும் என்று தோன்றியது. எனவே, அல்லாஹ்வே! நான் எனது வாக்குறுதிக்கேற்ப சந்தா வழங்க வேண்டும் என்று அதற்காக துஆ செய்தார். பிறகு ஈதிற்கான அன்பளிப்பாக அவர் கணக்கிட்டதை விட அதிகமாக கிடைத்தது. அவர் தனது வாக்குறுதியை முழுமையாக வழங்கி விட்டார்.

மாஸ்கோவின் முபல்லிக் ரிஜ்வி சாஹிப் எழுதுகிறார்:

புதிதாக பைஅத் செய்த ஒரு நண்பர் தாதும் சாஹிப். இவர் ரஷ்யாவின் மிகத் தொலைதூரப் பகுதியிலுள்ள கரடு முரடான போரியாத்தியா பகுதியைச் சார்ந்தவர். அவர் 2017 –ல் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு பெற்றார். இவ்வருடம் மார்ச் மாதம் ஒரு மாதத்திற்காக மாஸ்கோவுக்கு வந்தார். அஹ்மதி சகோதரர்களை சந்திக்கவே வந்தார். அதன் மூலம் கல்வி மற்றும் தர்பிய்யத் பயன்களைப் பெறுவதற்காக வந்தார். இவர் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர். பொருளாதார கஷ்டத்தினால் மிகவும் கடுமையான நிலையைச் சந்திக்க வேண்டி வந்தது.

மாஸ்கோவில் தங்கி இருக்கும்போது இஷா தொழுகைக்குப் பிறகு பேசிக் கொண்டிருந்தார். அப்போது ஜமாஅத்தின் பொருளாதாரத் திட்டங்கள் குறித்தும் அதன் பரக்கத்துகள் குறித்தும் விரிவாக கூறப்பட்டது. சிறிது சந்தா கொடுக்குமாறு கூறப்பட்டது. அவரது கஷ்டமான வரம்புக்குட்பட்ட வருமானத்தின் காரணமாக அவர் 50 ரூபிள் (Ruble) சந்தா கொடுப்போம் என்று நினைத்தார். இதுவே அவரைப் பொருத்தவரை பெரும் தியாகமாகும்.

மறுநாள் சுபுஹ் தொழுகைக்குப் பிறகு அவர் தஹ்ரீகே ஜதீது சந்தா மற்றும் வக்ஃபே ஜதீது சந்தாவிற்காக 2000 ரூபிள் சந்தா வழங்கினார். என் தரப்பில் இதனை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றார். அத்துடன் அவர் வருத்தப்பட்டுக் கொண்டே இருந்தார். நான் முதலிலேயே ஏன் சந்தா கொடுக்காமல் இருந்து விட்டேன். ஏன் இவ்வளவு தாமதம் செய்தேன். நான் அஹ்மதியாகி ஒரு வருடம் ஆகப்போகிறதே! என்று கூறி வந்தார்.

முபல்லிக் கூறுகிறார்: அவரது நிலைமைக்கேற்ப இது அவருக்கு பெரும் குர்பானியாகும். இதுவே குர்பானியின் தரம். இவர்களைப் பற்றிதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவர்களது பற்று மற்றும் விசுவாசம் கண்டு வியப்பு ஏற்படுகின்றது என்று கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 334 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு மாஸ்கோவிலிருந்து மண்டல முபல்லிக் கூறுகிறார்:

மாஸ்கோ ஜமாஅத்தின் உறுப்பினர் ஒருவர் 12 வருடங்களாக மாஸ்கோவில் பல்வேறு தரப்பில் பணியாற்றி வந்தார். தற்போது அவர் பணி செய்யும் இடத்தைப் பற்றி அவர் கூறுகிறார். என்னிடம் நேர்காணல் செய்யும்போது உரிமையாளர் கூறினார். சம்பளம் இங்கு அதிகரிக்காது. எவ்வளவு கிடைக்கிறதோ அதில்தான் வாழ்ந்து வர வேண்டும். எனவே இந்த சம்பளம் உங்களுக்கு பொருத்தமானதாகத் தெரிந்தால் பணி செய்யுங்கள். இல்லையென்றால் விட்டு விடுங்கள். உடனே நான் பணியை ஏற்றுக் கொண்டேன்.

சில காலம் கழித்து தஹ்ரீகே ஜதீது, வக்ஃபே ஜதீது சந்தா பற்றி ஜமாஅத்தில் கவனமூட்டப்பட்டது. நான் அந்தத் திட்டங்களில் முறையாக சந்தா செலுத்தி வந்தேன். சில நாட்களிலேயே நிர்வாகி என்னை அழைத்து, எந்த வெளிப்படையான காரணமும் கூறாமல் என் சம்பளத்தை 5000 ஆக உயர்த்தினார். மீண்டும் சில காலம் கழித்து என்னை அழைத்து, 2000 ரூபிள் மீண்டும் அதிகப்படுத்தினார்.

அப்போது எனக்கு உறுதியாகி விட்டது. இது முழுக்க முழுக்க இறை வழியில் பொருள் தியாகம் செய்ததன் விளைவாகும். அது அல்லாமல் உலகியல் ரீதியாக எந்த காரணமும் இருக்கவில்லை. இவ்விஷயத்தை நான் ஏதாவது அஹ்மதி அல்லாதவரிடம் கூற முயற்சி செய்தால் அவருக்கு இதனை முழுமையாகப் புரிய முடியாது. ஆனால் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவரால் நன்றாக புரிந்து கொள்ள முடியும். அல்லாஹ் தனது அருளால் எந்த உலகியல் காரணமும் இல்லாத நிலையில் தனது வழியில் தியாகம் செய்ததன் விளைவாக இந்த பரக்கத்தை வழங்கினான்.

பெனினின் அலைடா மண்டலத்திலுள்ள முபல்லிக் எழுதுகிறார்:

அவரது மண்டலத்திலுள்ள ஒரு ஜமாஅத் பாஞ்சி ஆகும். அங்கு மஸ்ஜிதும் கட்டப்பட்டுள்ளது – அல்ஹம்துலில்லாஹ். அங்கு ஜமாஅத்தின் சத்ர் சாஹிப் மூலம் ஒருவரை தஹ்ரீகே ஜதீதில் பங்கு பெறுமாறு கூறப்பட்டது. அப்போது அதிமாக வாக்குறுதி வழங்கி விட்டார். ஆனால் தற்போது பணி இல்லாததால் கையில் கஷ்டம் உள்ளது என்றார். அதன் பிறகு சத்ர் சாஹிபிடமிருந்து போன் வந்தது. நான் 10 ஆயிரம் ஃபிராங்க் ஷிஃபா சந்தா கொடுக்கிறேன். ரசீது போடுங்கள் என்றார். அல்லாஹ் அவரது வாக்குறுதிக்குப் பிறகு பெரும் அருள் செய்தான்.

அவர் கூறுகிறார்: எனக்கு வேலை கிடைத்து விட்டது. முதலில் வாக்குறுதி கொடுத்த பிறகு பணி கிடைத்தது. நான் சந்தா கொடுக்கிறேன். சந்தா வழங்கிய 15 நாட்களுக்குப் பிறகு மீண்டும் அவரது போன் வந்தது. அல்லாஹ் உடைய அருள் மேலும் கிடைத்துள்ளது. எந்த அளவுக்கு என்றால் குறித்த நேரத்திற்குள் வேலையை முடிக்க முடியுமா என்பது புரியவில்லை. அவ்வளவு வேலை வந்து விட்டது என்றார். அவருக்கு பெரிய வேலை ஒன்று கிடைத்து விட்டது. இது முழுக்க முழுக்க இறை வழியில் பொருள் தியாகம் செய்ததன் விளைவாகும். இங்கு அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப பன்மடங்கு அதிகமாக உடனே வழங்குகிறான்; உடனே வழங்குகிறான்.

மாலியில் இருந்து சிக்கோ மண்டலத்தைச் சார்ந்த முபல்லிக் எழுதுகிறார்:

அங்குள்ள கண் தெரியாத ஒரு பெண் கொஞ்சம்மை சந்தா அனுப்பினார். வருங்காலத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் சந்தாவை மிஷன் ஹவுஸிற்கு அனுப்பி விடுவேன் என்று அத்துடன் ஒரு தூதுச்

செய்தியையும் அனுப்பினார். காரணம் கேட்ட போது, சிலருக்கு அல்லாஹ் தானே கவனமூட்டுகிறான். அவர்களுக்கு இன்னும் கொடுப்பதற்காக அவ்வாறு செய்கிறான்.

அவர் கூறினார்: நான் கனவில் பார்த்தேன். நான் தூங்கிக் கொண்டிருக்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்து என்னை எழுப்பிச் சந்தா கொடுக்குமாறு கூறுகிறார்கள். இந்த வகையில் நான் கனவிலேயே எழுந்து மிஷன் ஹவுஸிற்குச் சென்று 5000 ஃபிராங்க் ஷிஃபா வழங்குகிறேன். இதன் பிறகு என் கண் திறந்து விட்டது.

புர்கினோஃபாஸோவிலிருந்து முபாரக் முனிர் சாஹிப் முபல்லிக் எழுதுகிறார்:

பிர்கோ ஜமாஅத்தின் ஒரு கலப்பற்ற மனிதரின் இரண்டு மகன்கள் சில காலமாக நோயுற்றிருந்தனர். கணிசமான சிகிச்சை அளிக்கப்பட்டது; குணமாகவில்லை. ஒருநாள் முபல்லிக் சாஹிப் அவரிடம் பொருள் தியாகம் பற்றி கூறினார். அவர் தனது தகுதிக்கேற்ப சந்தா வழங்கினார்.

அல்லாஹ்வே! எனது தியாகத்தை ஏற்றுக் கொள்வாயாக என்று துஆ செய்தார். எனது மகன்களுக்கு விரைவில் நலம் வழங்குவாயாக. சில நாட்களிலேயே அவரது மகன்களுக்கு கணிசமாக குணம் கிடைத்தது. ஒரு மகன் முற்றிலும் குணமாகி விட்டார். மற்ற மகனும் கணிசமான அளவுக்கு குணமடைந்தார்.அவருக்கும் அல்லாஹ் அவரது தியாகத்தை ஏற்றுக் கொண்டவாறு குணத்தை வழங்குவான் என்ற திட உறுதி உள்ளது.

புர்கினோஃபாஸோவின் போபோவின் வஸிய்யத் செயலர் கூறுகிறார்:

நான் வஸிய்யத் சந்தாவை ஒவ்வொரு மாதமும் செலுத்தி விடுகிறேன். ஆனால் தஹ்ரீகே ஜதீது, வக்ஃபே ஜதீது சந்தாவில் அதிக தாமதம் ஏற்பட்டு விடுகிறது. ஒருமுறை அவர் எனது குத்பாவை கேட்ட பிறகு உள்ளத்தில் ஓர் எண்ணம் வந்தது. வருடம் முடியும் முன்பே ஏன் எல்லா சந்தாவையும் கொடுத்து முடிக்கக் கூடாது? இந்த வகையில் சந்தாவை கொடுத்து முடிந்ததும் கனவில் பார்க்கிறேன். ஒரு வெள்ளை ஆடை அணிந்த மனிதர் என்னிடம் சாவியைத் தருகிறார். அப்போது எனக்கு கனவு புரியவில்லை. சில நாட்களுக்குப் பிறகு எனது சகோதரரிடமிருந்து ஹஜ் செய்ய ஆயத்தமாகுங்கள். நான் எல்லா செலவுகளையும் ஏற்றுக் கொள்கிறேன் என்று தூதுச் செய்தி வந்தது. இவ்வாறு பொருள் தியாகத்தின் விளைவால் அல்லாஹ் ஹஜ் செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்கினான்.

ஜெர்மனியின் தஹ்ரீகே ஜதீது செயலர் எழுதுகிறார்: போர்கன் (Borken) ஜமாஅத்தின் ஒரு நண்பர் 900 ரூபாய் தஹ்ரீகே ஜதீது சந்தாவை அதிகப்படுத்தினார்.

அந்த நண்பர் கூறுகிறார்: நான் வாக்குறுதி அளித்த நாளின் அடுத்த நாள் வேலைக்குச் சென்றபோது உமது வருமானத்தில் 100 ரூபாய் அதிகமாக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. பிப்ரவரியில் இருந்து அக்டோபர் வரை கணக்கிட்டபோது அது 900 ரூபாய் ஆகிறது. நண்பர் கூறுகிறார்: உடனேயே அல்லாஹ் ஏற்பாடு செய்வான் என்ற திட உறுதி எனக்கு இருந்தது. ஆனால் இவ்வளவு விரைவில் அதாவது 24 மணி நேரம் கூட கழியும் முன் ஏற்பாடு செய்வான் என்று நினைக்கவில்லை.

ஜெர்மனியின் தஹ்ரீகே ஜதீது செயலர் கூறுகிறார்:

ஒரு நண்பர் அகதி என்ற முறையில் சில பிரச்சனைகளால் அவதிப்பட்டு வந்தார். அவருக்கு பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டப்பட்டது. சில நாட்களுக்குள் அவர் கூறினார். நீங்கள் எனக்கு கவனமூட்டியுள்ளீர்கள். நான் 100 யூரோ வாக்குறுதி அளித்திருந்தேன். அப்போது என்னிடம் 20 யூரோ தான் இருந்தது. நான் அந்த 20 யூரோவை வழங்கி விட்டேன். பிறகு வீட்டிற்குச் சென்றபோது நான் வேலை பார்த்த இடத்திலிருந்து உங்களது கணக்கில் சிறிது பணம் உள்ளது. வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று போன் வந்தது.

அது ஒரு 300 அல்லது 400 யூரோவாக இருக்கும் என்பது எனது எண்ணமாக இருந்தது. அனால் எனக்கு பணம் கிடைத்தபோது எண்ணாமல் சட்டைப் பையில் வைத்து விட்டேன். முதலில் நான் தஹ்ரீகே ஜதீதின் எஞ்சிய வாக்குறுதியை நிறைவேற்றினேன். பிறகு மற்ற தேவைகளுக்காக பணம் எடுத்தேன். பிறகு சிறிது தொகை எஞ்சி இருந்தது. பிறகு கணக்கிட்டபோது அங்கிருந்து 1000 யூரோ கிடைத்துள்ளதாக தெரிய வந்தது.

அவர் கூறுகிறார்: நான் 100 யூரோ வாக்குறுதி அளித்திருந்தேன். அல்லாஹ் அதற்கு பதில் பத்து மடங்கு அதிகப்படுத்தி விட்டான். முதலில் நான் சம்பவங்கள் கூறக் கேட்டுள்ளேன். நான், அல்லாஹ் யதார்த்தத்தில் அவ்வாறு செய்கின்றானா என்று நினைத்ததுண்டு. ஆனால் எனக்கே அது குறித்து அனுபவம் ஏற்பட்டு விட்டது.

ஐவரிகோஸ்டின் மண்டல முபல்லிக் எழுதுகிறார்:

அங்கு தஹ்ரீகே ஜதீது சந்தாவுக்காக ஓரிடத்திற்குச் சென்றோம். அது புதிய ஜமாஅத் ஆகும். ஒரு வருடத்திற்கு முன்புதான் அனைவரும் பைஅத் செய்து இணைந்திருந்தனர். தஹ்தீகே ஜதீதின் முக்கியத்துவம் பற்றி சொற்பொழிவாற்றப்பட்டது. அதன் நோக்கம் விளக்கப்பட்டது. மேலும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எல்லா மக்களும் இதில் பங்கு பெறுமாறு கூறியுள்ளார்கள் என்று கூறப்பட்டது. மறுநாள் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு ஜமாஅத் மக்கள் தத்தமது தகுதிக்கேற்ப கொடுக்கத் தொடங்கினர். மஸ்ஜிதின் இமாமும் பங்கு பெற்றார்.

தமது குடும்பம் சார்பாகவும் தஹ்ரீகே ஜதீது சந்தா வழங்கினார். பிறகு 6 வயது மகன் 100 ஃபிராங்க் பணம் எடுத்துக் கொண்டு வந்து இது எனது சந்தா என்று கூறினான். நாங்கள் இந்த சிறு வயது பையனின் சந்தாவைப் பார்த்தபோது அவன் மீது நேசம் ஏற்பட்டது. இந்த வயதில் பொருள் தியாகத்தில் என்னவொரு ஆர்வம்? அல்லாஹ் இந்த புதிதாக பைஅத் செய்தவர்களின் தியாகத்தை ஏற்று அருள் புரிவானாக. அவர்களுக்கு மார்க்கம் மற்றும் உலக நன்மைகளை வழங்குவானாக.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய செய்தி வந்துள்ளது. ஓரிடத்தில் ஒரு மவ்லவி மஸ்ஜிதில் பொருள் தியாகம் குறித்து கவனமூட்டினார். அப்போது அங்கு அவரது மனைவியும் இருந்தார். அவளுக்கு அதனைக் கேட்டு பெரும் தாக்கம் ஏற்பட்டது. வீட்டிற்குச் சென்று நகைகளைக் கழற்றி எடுத்து வந்து மஸ்ஜிதிற்காக வழங்கி விட்டார். மவ்லவி கூறினார்: இது மக்களுக்காக கூறினேன்; உனக்காக அல்ல. நீ தியாகம் எல்லாம் செய்யாதே.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 264,265 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆம்! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்கிய ஜமாஅத்தில் மவ்லவிகளும் அவர்களின் சந்ததிகளும் அதில் ஆர்வமுடன் பங்கு பெறுகிறார்கள்.

இந்தோனேஷியாவில் ஓர் உதாரணம். அங்குள்ள ஒரு பெண்மணி ஸிபியா சாஹிபா எழுதுகிறார்:

இவர் 2014 –ல் கிறிஸ்தவத்திலிருந்து வந்து அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். பைஅத் செய்த பிறகு அவரது கிறித்தவ குடும்பத்திலிருந்து பெரும் எதிர்ப்பு வந்து விட்டது; ஏசப்பட்டார். அவர் தம்மை இழிவுபடுத்தியதாகவும் கூறுகிறார். வீட்டிலுள்ளோர் நான் அவர்களின் வீட்டின் ஒரு ஆளாக இருக்கவில்லை எனக் கருதினர். ஆனால் இங்கு எனக்கு அன்பும் நேசமும் கிடைத்தது. எனக்கு ஓர் அஹ்மதியுடன் திருமணமும் நடந்தது. சில காலத்திற்குப் பிறகு எனது கணவருக்கு வாகனத்தினால் விபத்து ஏற்பட்டது. இடது காலில் எலும்பு முறிந்தது. அப்போது நான் 4 மாத கர்ப்பிணியாக இருந்தேன்.

அப்போது தஹ்ரீகே ஜதீதின் புதிய வருடமும் தொடங்கி இருந்தது. நான் எனது கணவரிடம் வாக்குறுதி கேட்டேன். அவர் மிகவும் நம்பிக்கையுடன் 5 இலட்சம் இந்தோனேஷிய ரூபாய் எழுதுமாறு கூறினார். இந்தோனேஷியா ரூபாய்க்கு மிகவும் குறைந்த மதிப்புதான் உள்ளது. எனினும் அங்கு வாழ்பவர்களுக்கு அது கணிசமான மதிப்புள்ள தொகையாகும். எழுதச் சொல்லுங்கள். அடுத்த வருடம் எனக்கு வேலை கிடைத்து விடும் என்று கூறினார்.

எனக்கு மிகவும் ஆச்சரியம். இவர் ஊன்றுகோல் வைத்து நடக்கிறார். எவ்வாறு வேலை கிடைக்கும்? இருந்தும் அவர் கூறியபடி வாக்குறுதியை எழுதினேன். அவ்வாறே நாள் கழிந்தது. வருடம் முடிய இருந்தது. மிகவும் கஷ்டமாகி விட்டது. எனது கணவரோ வேலையில்லாமல் இருக்கிறார். எவ்வாறு கொடுக்கப் போகிறோம்? என்று நான் உடனே துஆ செய்தேன். அல்லாஹ் தனது வல்லமையைக் காட்டினான்.

அவர் கூறுகிறார்: எனது கணவருக்கு ஒரு தனியார் கம்பெனியில் நல்ல வேலை கிடைத்தது. நாங்கள் வாக்குறுதிக்கேற்ப நூறு சதவீதம் வழங்கி விட்டோம்.

இந்தோனேஷியாவிலிருந்து வார்தி சாஹிபா என்ற பெண்மணி எழுதுகிறார்:

கடந்த ரமலானில் எனது குடும்பம் ஒரு பிரச்சனையில் சிக்கி இருந்தது. எனது மாமனார் நோயுற்றிருந்தார். அவரை மருத்துவமனையில் சேர்த்திருந்தோம். அங்கு அவருக்கு சிகிச்சை நடந்து வந்தது. அப்போது அவரது நிலை ICU –ல் சேர்க்கும் அளவுக்கு மோசமானது. குறைவாகவே நம்பிக்கை இருந்தது.

அவர் கூறுகிறார்: அப்போது எனது ஹுஸூரின் குத்பா நினைவுக்கு வந்தது. அது தஹ்ரீகே ஜதீதின் பரக்கத்துகள் குறித்து கொடுக்கப்பட்டிருந்தது. இந்த வகையில் வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் கூடி முடிவு செய்தோம். இந்த ரமலான் மாதத்திலேயே தஹ்ரீகே ஜதீது சந்தாவை 100 சதவீதம் கொடுத்து விட வேண்டும் என்பதே அந்த முடிவாகும். செயல்ரீதியாக 100 சதவிதம் வழங்கி விட்டோம். துஆவுக்காக எனக்கு எழுதி இருந்தார்.

அவர் கூறுகிறார்: அல்லாஹ்வின் அருளாலும் துஆ மற்றும் தியாகத்தின் விளைவாகவும் எனது மாமனாரின் நிலை நன்றாகி விட்டது. நன்றாகிக் கொண்டே சென்றது. சில நாட்களுக்குப் பிறகு மருத்துவர் வீட்டிற்கு திரும்பிச் செல்ல அனுமதி அளித்தார். வீட்டிற்குச் சென்றதும் அண்டை அயலாருக்கு அவர் முற்றிலும் சரியானது தெரிந்தது. அவர்களுக்கு மிகவும் ஆச்சர்யம் ஏற்பட்டது. இவ்வளவு கடுமையான நோயினால் மரணமே ஏற்படும். ஆனால் அவர் குணம் பெற்று திரும்பி விட்டாரே என்பது அவர்களின் ஆச்சர்யம்.

பிறகு ஐரோப்பாவிலிருந்து பெர்மிங்கம் ஜமாஅத்தின் தலைவர் எழுதுகிறார்:

தஹ்ரீகே ஜதீதின் பட்ஜெட்டை பூர்த்தி செய்ய 1500 பவுண்டு பின்னால் இருந்தோம். சில மணி நேரமே எஞ்சி இருந்தது. அத்துடன் Closing ஆகி விடும். பல்வேறு மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. ஒரு நண்பர் ஏற்கெனவே 2400 பவுண்டு கொடுத்திருந்தார். அவர் 1500 பவுண்டை தாம் கொடுப்பதாகக் கூறினார். அப்போது அந்த நண்பர் வெளிநாட்டில் இருந்தார். அவர் online –லேயே தமது சந்தாவை வழங்கி விட்டார்.

நான் 1500 பவுண்டு வழங்கிய நாளுக்கு அடுத்த நாள் Tax Department –லிருந்து 6 ஆயிரம் பவுண்டு திரும்ப கிடைத்தது. அல்லாஹ் உடனேயே 4 மடங்கு அதிகமாக்கித் தந்து விட்டான் என்று அவர் கூறுகிறார். இது ஏழைகளின் தியாகத்தில் அல்லாஹ் ஏற்படுத்திய பெரும் விளைவுகள் ஆகும்.

புருண்டியின் முஅல்லிம் சாஹிப் எழுதுகிறார்:

கடந்த வருடம் நாங்கள் ஒரு புதிய ஜமாஅத்தான இயாங்காவுக்குச் சென்றோம். அங்கு ஒரு புதிதாக பைஅத் செய்த நண்பரான நஸீருத்தீன் சாஹிபுக்கு சந்தாவின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக் கூறப்பட்டது. நஸிருத்தீன் சாஹிப், அப்போது என்னிடம் எதுவும் இல்லை. பழம் தரும் மரங்கள் இருந்தன. அந்த பழங்களை விற்று சந்தாவை கொடுப்பேன் என்று கூறினார். இந்த தியாகம் பழங்காலத்தில் காணப்பட்டது. இப்போது அது இங்கு நடக்கிறது. இதற்கு ஒன்றிரண்டு நாட்களில் அதன் பழம் 1000 புரண்டி ஃபிராங்கிற்கு விலை போனது. முழு தொகையையும் சந்தாவாக வழங்கி விட்டார். அவர், நான் பழங்களை விற்றேன். சந்தாவின் பரக்கத்தால் பழங்கள் மிக அதிகமாக இருந்தன. இப்போது முன்பை விட அதிகமாக பழங்கள் விளைந்துள்ளன. 40–45 ஆயிரம் புருண்டி ஃபிராங்கிற்கு விலை போனது என்கிறார்.

கோங்கோ பிரால்வீல் மவ்லவி சாஹிப் எழுதுகிறார்:

ஒரு நண்பர் முவாலி என்பவரது குழந்தை நீண்ட நாளாக நோயுற்றிருந்தது. அவரிடம் சந்தா பற்றி எடுத்துக் கூறச் சென்றபோது அவர் வழங்கினார். இந்த சந்தாவின் பரக்கத்தினால் என் குழந்தைக்கு நிவாரணம் வழங்குவாயாக என்று துஆ செய்தார். அந்த நண்பர் கூறுகிறார்: சில நாட்களுக்குள்ளேயே என் குழந்தையின் ஆரோக்கியம் நன்றாகி விட்டது. நானே வியந்து போனேன். எவ்வாறு எமது இறைவன் துஆவை ஒப்புக் கொள்கிறான்! எளிய தியாகத்தையும் ஏற்றுக் கொள்கிறான்!

கனடாவின் தஹ்ரீகே ஜதீது செயலர் எழுதுகிறார்:

ஒரு சகோதரி கூறுகிறார்: அவரது கணவர் 1000 டாலர் வாக்குறுதி வழங்கி இருந்தார். அவர் நீண்ட காலமாக வேலை இல்லாமல் இருந்தார். எனவே கொடுக்க இயலவில்லை. வருடம் முடிய ஒரு வாரமே இருந்தது. சந்தா செயலர் சந்தாவிற்காக வீட்டிற்கு வந்தார். அவரது கணவர் வீட்டிற்கு வந்து மனைவியிடம் என்னிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லையே என்ன செய்வது? என்றார். அவரது மனைவி, அவரை வெறுங்கையுடன் அனுப்ப முடியாது என்று கூறி அவரிடம் இருந்ந 1000 டாலர் சேமிப்புத் தொகையை சந்தாவாக கொடுத்து விட்டார். சந்தாவின் பரக்கத்தால் ஒரு வாரத்திற்குள் 7 ஆயிரம் டாலர் மாதச் சம்பளத்துடன் வேலை கிடைத்தது.

ஐவரிகோஸ்டின் முபல்லிக் எழுதுகிறார்:

சாம்பிரதோவில் ஒரு சிறுவன். அவனது வயது 14 ஆகி இருந்தது. இந்த பையனின் தந்தையார் கூறுகிறார்: எனது மகனை ஞாயிறன்று ஒரு வீட்டு வேலைக்காக கூறும்போது, அவன், நான் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் சந்தா செயலர் ஆவேன். சந்தா வசூலிக்கிறேன். ஆனால் எனது சந்தாவை இன்னும் கொடுக்கவில்லை. மற்ற நாட்களில் பள்ளிக்கூடம் செல்ல வேண்டியதுள்ளது. எனவே இன்று யாருடைய வயலிலாவது சென்று

வேலை செய்ய விரும்புகிறேன். கிடைக்கும் பணத்தில் சந்தா கொடுத்து இவ்வாறு வாக்குறுதியை நிறைவேற்றுவேன் என்றான். நான் வழக்கம்போல் அவனிடம் உன் தரப்பில் நான் சந்தா கொடுத்து விடுகிறேன் என்று கூறிய போது பையன் கூறினான்: முரப்பி சாஹிப் எனது கை பணத்திலிருந்து கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். ஆனால் இந்த முறை அது என்னால் முடியவில்லை.

எனவே இன்று நான் வேலை செய்து அதிலிருந்து சந்தா கொடுப்பேன் என்றான். இவ்வாறு அவன் வேலை செய்து சந்தாவை வழங்கி விட்டான். இந்த ஒரு சிந்தனையை சிறுவர்களிடம் தூரப் பகுதியிலிருந்து வந்து சேர்பவர்களிடம் அல்லாஹ் உருவாக்கியுள்ளான்.

ஜெர்மனியின் தேசிய தஹ்ரீகே ஜதீது செயலர் கூறுகிறார்:

யகிப் ஜமாஅத்தின் ஒரு பெண்மணி கூறினார். எனது தாயார் பாகிஸ்தானில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருந்தார். அதிகமாக பொருள் தியாகம் செய்து வந்தார். ஈது வந்து விட்டால் புதிய துணிமணி கிடைக்குமா என்பது எமது எண்ணமாக இருக்கும். எமது தாயாரிடம் தஹ்ரீகே ஜதீதில் 100 சதவீதம் பூர்த்தி செய்து துஆவின் பட்டியலில் இணைய வேண்டும் என்பதே நோக்கமாக இருக்கும். பெரும்பாலும் அவர் கடன் வாங்கி கொடுத்து விடுவார். பிறகு கடனை அடைப்பார். ஸ்பெயின் மஸ்ஜிது பஷாரத்தின் திட்டம் எடுத்து வைக்கப்பட்டபோது எனது தாயார் தனது ஒரேயொரு நகையையும் வழங்கி விட்டார். இதனால் அவருக்கு கணவர் வீட்டில் பெரும் பேச்சுக்களைக் கேட்க வேண்டியது ஏற்பட்டது.

அவர் கூறுகிறார்: அப்போது நான் சிறு வயது பெண்ணாக இருந்தேன். இவ்வாறு நம்மையே கஷ்டத்தில் போட்டுக் கொண்டு தியாகம் செய்வது சரியல்ல என்று நினைத்தேன். இதே கொள்கை என் மூளையில் அமர்ந்து விட்டது. கடந்த வருடம் தஹ்ரீகே ஜதீது சந்தாவுக்காக கூறப்பட்டபோது நான் எனது தாயாரைப் போன்று இருக்கக்கூடாது என்று கருதினேன். அவர் கூறப்பட்டவுடன் அனைத்தையும் வழங்குபவராக இருந்தார்.

எனவே நான் அறிவுடைமையை வெளிப்படுத்தியவாறு 30–35 யூரோ வாக்குறுதி அளித்திருந்தேன். ஆனால் இறைவன் என்ன செய்தான் என்றால் சில காலத்திலேயே எனது கழுத்தில் ஒரு கட்டி வந்தது. அதனால் எனக்கு பெரும் கவலை ஏற்பட்டது. டாக்டர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார். எனக்கு அப்போது நகையும் பெரிதாக தெரியவில்லை. உடையும் பெரிதாகத் தெரியவில்லை. (அப்போது நான் ஒரு குத்பா கொடுத்திருந்தேன். அதில் பொருள் தியாகம் பற்றி குறிப்பிட்டிருந்தேன். )

அதனைக் குறிப்பிட்டவாறு அப்பெண் கூறுகிறார்:

காலத்தின் கலீஃபாவின் குத்பாவைக் கேட்டவுடன் என் உள்ளத்தில் எனது எல்லா நகைகளையும் தஹ்ரீகே ஜதீதிற்கு கொடுத்து விட வேண்டும் என்ற எண்ணம் வந்தது. இவ்வாறு விற்று அதனை கொடுத்து விட்டேன். பிறகு மீண்டும் டாக்டரிடம் சென்றேன். இப்போது அது போய் விட்டது. அல்லாஹ் இவ்வாறு எனது பயத்திலிருந்து பாதுகாப்பு வழங்கினான். இறைவன் எனது கர்வமிக்க நடைமுறைக்கு தண்டனை கொடுத்துள்ளான். எனவே இது குறித்து எனக்கு எந்த தப்பெண்ணமும் இல்லை.

எனது கணவருக்கு ஒரு ஹோட்டலில் வேலை செய்வதனால் சந்தா கொடுப்பதில் இயலாமை இருந்தது. நான், எனது கணவருக்க நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்று துஆ செய்து வந்தேன். நான் 500 யூரோ தஹ்ரீகே ஜதீதில் வழங்குவேன் என்று முடிவு செய்தேன். அல்லாஹ் எனது கணவருக்கு அற்புதகரமான முறையில் நல்ல வேலையைத் தந்தான். இப்போது கணவரும் மனைவியும் சந்தா கொடுக்கிறார்கள்.

லாஹூரின் லஜ்னா தஹ்ரீகே ஜதீது செயலர் எழுதுகிறார்:

வாப்டர் டவுனில் உள்ள ஓர் உறுப்பினர் ஒன்றரை வருடமாக மூச்சு விடுவதில் பிரச்சனையுடன் இருந்தார். தலைமையக பிரதிநிதிகள் செல்லும்போது அவர்களிடம் மேலும் 50 ஆயிரம் ரூபாய் அதிகமாக வாக்குறுதி அளித்தார். அல்லாஹ் அவருக்கு பெரும் அருள் செய்தான். அந்த நோய் சிகிச்சை மேற்கொண்டும் கூட மீண்டும் மீண்டும் இருந்து வந்தது. அந்த நிலை இப்போது மாறியது. இப்போது அவர் மிகவும் உடல் நலத்துடன் இருக்கிறார்.

கேம்பியாவின் அமீர் சாஹிப் எழுதுகிறார்:

ஜர்ரா இன்டிஸில் ஒரு நண்பர் தஹ்ரீகே ஜதீது சந்தா முறையாக கொடுத்து வந்தார். தற்போது அவரது ஊரில் விலங்குகளுக்கு நோய் தொற்றியது. ஊரிலுள்ள விலங்குகள் மரித்தன. எல்லாரும் தமது விலங்குகளை இழந்து நின்றனர். சாமியா சாஹிபுக்கு ஒரு விலங்கும் மரிக்கவில்லை. ஊர்க்காரர்கள் எல்லாம் உமது விலங்குகள் எதுவும் மரிக்கவில்லையே? என்ன காரணம் என்று கேட்டனர். அவர் கூறினார்: நாம் ஒவ்வொரு வருடமும் எனது விலங்குகள் ஒன்றை விற்று சந்தா கொடுத்து வருகிறேன். இதன் பரக்கத்தால் அல்லாஹ் இந்த எனது விலங்குகளை நோயிலிருந்து காப்பாற்றியுள்ளான் என்றார். இதனால் ஊரின் அஹ்மதியான மற்ற மக்களும் தஹ்ரீகே ஜதீது சந்தா வழங்கினர். அப்போது அவர்களின் விலங்குகளும் நன்றாக தேறி வருவதைக் கண்டனர்.

வெட்னரி (veterinary) டாக்டர் கூறினார்:

இந்த நோய் வந்தால் விலங்குகள் உயிர் பிழைக்கவே செய்யாது. சில நாட்களுக்குப் பிறகு வெட்னரி டாக்டர் வந்தனர். அவர்கள் விலங்குகளைப் பார்த்து விட்டு என்ன சிசிச்சை செய்தீர்கள்? என்று கேட்டனர். இதனால் இந்த விலங்குகள் சரியாகி விட்டனவே? அப்போது அவ்வூரைச் சார்ந்தவர்கள் சந்தாவின் ரசீதை எடுத்துக் காட்டி இதுவே எங்கள் சிகிச்சை முறை என்றனர். இதனால் டாக்டர்கள் பெரிதும் வியந்தனர். தாமும் அஹ்மதிய்யா ஜமாஅத் குறித்து ஆய்வு செய்வதாகக் கூறினர்.

இவ்வாறு அவருக்கு ஜமாஅத்தின் கணிசமான நூல்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு இந்த தூரப் பகுதியிலுள்ள மக்களிடம் ஈமான் மற்றும் களங்கமின்மை எவ்வாறு உள்ளது பாருங்கள். அவர்களின் இந்த களங்கமின்மை மற்றும் ஈமான் மற்றும் இறை வாக்குறுதியின் மீது திட உறுதி மற்றவர்களையும் கூட இஸ்லாத்தைப் பற்றி சிந்திக்க வாய்ப்பு ஏற்படுத்தியது. அல்லாஹ் இவர்கள் அனைவரின் ஈமான் மற்றும் உறுதியை வளரச் செய்வானாக. எப்போதும் தமது அன்புப் பார்வையை இவர்களின் மீது இடுவானாக.

அல்லாஹ்வின் அருளின் இந்த சம்பவங்களைக் கூறிய பிறகு நான் நவம்பரின் ஆரம்பத்தில் தஹ்ரீகே ஜதீதை அறிவிப்பது போன்று தஹ்ரீகே ஜதீதின் புதிய வருடத்தை அறிவித்தவாறு கடந்த வருடத்தின் சில பட்டியலைத் தருகிறேன்.

இது தஹ்ரீகே ஜதீதின் 85 –வது வருடமாகும். நவம்பர் ஒன்றாம் தேதி முதல் ஆரம்பமாகும். 84 –வது வருடத்தில் அல்லாஹ் வழங்கிய அருள்களைக் குறித்து கூறுகிறேன். வந்த அறிக்கைகளின் அடிப்படையில் 12.79 மில்லியன் பவுண்டை விட அதிகமாகும். அதாவது ஒரு கோடியே 27 இலட்சத்து 93 ஆயிரம் பவுண்டு தியாகம் செய்யும் வாய்ப்பை ஜமாஅத்தின் மாசற்ற மக்களுக்கு வழங்கியுள்ளான். இது கடந்த வருடத்தை விட 2 இலட்சத்து 12

ஆயிரம் பவுண்டு அதிகமாகும். உலகில் பெரும் விரும்பத்தகாத நிலைமைகள் இருந்த நிலையிலும் கூட பல்வேறு நாடுகளில் கரன்சிகள் Devalue ஆன நிலையிலும் கூட மக்களுக்கு இந்த வாய்ப்பினை வழங்கியுள்ளான்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பாகிஸ்தான் முதல் நிலையில் உள்ளது. அதன் பிறகு (1) ஜெர்மனி (2) பிரிட்டன் (3) அமெரிக்கா (4) கனடா (5) இந்தியா (6) ஆஸ்திரேலியா (7) மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று (8) இந்தோனேஷியா (9) கானா (10) மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று முறையே இடம் பெற்றுள்ளன.

தனி நபர் விகிதாச்சாரத்தின் படி (1) சுவிட்சர்லாந்து (2) அமெரிக்கா (3) யூ.கே. (4) சிங்கப்பூர் (5) சுவீடன் (6) பெல்ஜியம் (7) கனடா (8) பின்லாந்து முறையே உள்ளன.

ஆப்பிரிக்க நாடுகளின் மொத்த வசூலின் அடிப்படையில் ஜமாஅத்துகள் முறையே கானா, நைஜீரியா, கேம்பியா, தன்ஸானியா உள்ளன.

கலந்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கையின் பக்கம் கவனம் செலுத்தப்படுகிறது. அல்லாஹ்வின் அருளால் இவ்வருடம் 17 இலட்சத்து 17 ஆயிரம் மக்கள் இதில் கலந்து கொண்டனர். ஒரு இலட்சத்து 17 ஆயிரம் பேர் சென்ற வருடத்தை விட அதிகமாகி உள்ளனர். கூடுதலாக மக்கள் இணைந்துள்ளனர். நைஜர், கேம்பியா, பெனின், புர்கினோஃபாஸோ, கானா, நைஜீரியா, கேமரூன், கோங்கோ, குன்சா, லைபீரியா, மொரீஷியஸ், ஐவரிகோஸ்ட் ஆகியவை கவனம் செலுத்தும் அளவுக்கு அதிகமாக்கி உள்ளன.

பெரிய ஜமாஅத்துகளில் இந்தோனேஷியா, ஜெர்மனி, இந்தியா, பாகிஸ்தான், கனடா, அமெரிக்கா, நார்வே ஆகியோர் இப்பட்டியலில் வருவர். முதல் கணக்கு ஏடும் அல்லாஹ்வின் அருளால் வந்து கொண்டிருக்கிறது. அதில் 5 ஆயிரத்து 937 உள்ளனர். பொருள் தியாகத்தில் பாகிஸ்தானின் 3 பெரும் மாவட்டங்களில் முதலிடம் லாஹூர். இரண்டாமிடம் ரப்வா. மூன்றாமிடம் கராச்சி ஆகும். ரப்வா அது ஒரு மாவட்டமாக இல்லாதபோதிலும் மாவட்டங்களின் பட்டியலில் இணைக்கப்படுகிறது. அது ஒரு நகரம்தான்.

மேலும் மாவட்ட அளவில் பாகிஸ்தானில் அதிகமாக தியாகம் செய்துள்ள மாவட்டங்கள் இதுவாகும். (1) சியால்கோட் (2) ஸர்கோதா (3) குஜராத் (4) குஜ்ரான்வாலா (5) உமர்கோட் (6) ஹைதராபாத் (7) நாரோவால் (8) மீர்பூர்ஹாஸ் (9) டோபா டேக்சிங் (10) மீரா ஆசாத் காஷ்மீர் ஆகும்.

மேலும் வசூலின் அடிப்படையில் முன்னணி ஜமாஅத்துகளான இஸ்லாமாபாத், இமாரத் டின்பஸ் லாஹூர், இமாரத் டவுண்ஷிப் லாஹூர், இமாரத் அஸீஸாபாத், கராச்சி, பெஷாவர், இமாரத் குல்ஷனாபாத் கராச்சி, இமாரத் கரீம் நகர், பைஸலாபாத், கொயிட்டா, நவாப்ஷாஹ், பஹாவல்பூர் மற்றும் உகாடா ஆகும்.

ஜெர்மனியில் முன்னணியிலுள்ள முதல் பத்து ஜமாஅத்துகள் இவையாகும்: 1)நோயஸ் 2)ருயிடர் மார்க் 3) பெனின் பர்க் 4) மஹ்தியாபாத் 5) கீல் ஃப்லூனஸ் 7) கோயில்ஸ் 8) வொயின் கார்ட்டன் 9) கோலன் 10) கோலம் பர்க்.

ஜெர்மனியில் முதல் பத்து உள்ளூர் அமாரத்துகள் இவையாகும்: 1)ஹெம்பர்க் 2)ஃப்ராங்பர்ட் 3) மோர்ஃபெல்டன் 4) கிரோஸ் கெரோவ் 5) ஸன்பாக் 6) வஸ்பாதன் 7) மான்ஹைம் 8) ரேச்சல்ஸ்டட் 9) ஓஃபன் பர்க் 10) ட்ராம்ஸ்டட் .

ஒட்டு மொத்தமாக பணம் செலுத்தியதன் அடிப்படையில் பிரிட்டனின் முதல் 5 மண்டலங்கள் முறையே 1) இலண்டன் 2) பி இலண்டன் 3) அயே மிட்லண்டஸ் 4) நார்த் ஈஸ்ட் 5) சவுத்.

ஒட்டு மொத்த வசூலின் அடிப்படையில் பிரிட்டனில் முன்னனணி ஜமாஅத்துகள்: 1) மஸ்ஜிது ஃபஸ்ல் 2) வொர்ஸ்ட்டர் பார்க் 3) பர்மிங்கம் சவுத் 4) நியூ மால்டன் 5)பிராட்ஃபோர்ட் நார்த் 6)இஸ்லாமாபாத் 7)பர்மிங்கம் வெஸ்ட் 8) கிளாஸ்கோ 9) ஜிலின்ங்கம் 10) சக்நோர்ப்

மேலும் ஐந்து சிறிய ஜமாஅத்துகள்.

1) ஸ்பென் வேலி 2) சவான்ஸி 3) நார்த் வேல்ஸ் 4) சவுத் ஃபீள்ட்ஸ் 5) எடின்புரா

வசூலின் அடிப்படையில் முதல் ஐந்து ரீஜியன். 1) சவுத் வெஸ்ட் 2) மிட்லாண்ட்ஸ் 3) இஸ்லாமாபாத் 4) நார்த் ஈஸ்ட் 5) ஸ்காட்லாந்து.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் அமெரிக்காவின் ஜமாஅத்துகள்.

1) அவ்ஷ்கோஷ் 2) சிலிகான் வேலி 3) சியாடில் 4) டெட்ராய்ட் 5) சில்வர் ஸ்பிரிங் 6) யார்க் 7) சென்ட்ரல் வெர்ஜினியா 8) ஜார்ஜியா 9) அட்லாண்ட்டா 10) லாஸ் ஏன்ஞ்சஸ் ஈஸ்ட் 11) சென்ட்ரல் ஜெர்ஸே 12) லாரேல்

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் கனடாவின் உள்ளூர் அமாரத்துகள்.

1) பிராம்ப்டன் 2) வாகன் 3) பீஸ் வில்லேஜ் 4) கேல்கரி 5) வேன்கோவர் 6) வெஸ்டன் 7) மிஸ்ஸஸ் ஸாகா

வசூலின் அடிப்படையில் கனடாவின் முதல் ஐந்து ஜமாஅத்துகள்

1) எட்மோன்ட்டர் ஈஸ்ட் 2) டுர்ஹாம் 3) ஹேமில்ட்டன் சவுத் 4) பிராட்ஃபோர்ட் 5) சஸ்காடோன் நார்த்

தியாகம் செய்த ஜமாஅத்துகளின் அடிப்படையில் இந்தியாவின் முதல் பத்து பெரிய ஜமாஅத்துகள். காதியான் (பஞ்சாப்), ஹைதராபாத் (தெலுங்கானா), பத்தபிரியம் (கேரளா), சென்னை (தமிழ்நாடு), கோழிக்கோடு (கேரளா), பெங்களூர் (கர்நாடகா), கல்கத்தா (வங்காளம்), பயங்காடி (கேரளா), கன்னூர் டவுன் (கேரளா), யாதுகீர் (கர்நாடகா).

மாநிலங்களின் அடிப்படையில் தியாகத்தில் முன்னிலையிலுள்ள இந்தியாவின் ஜமாஅத்துகள். கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, தெலுங்கானா, ஜம்மு காஷ்மீர், ஒடிசா, பஞ்சாப், வங்காளம், தில்லி மற்றும் மஹாராஷ்டிரா.

தியாகம் செய்த இந்த அனைவரது செல்வத்திலும் அல்லாஹ் அபிவிருத்தியை ஏற்படுத்துவானாக. ஆமீன்

மொத்த வசூலின் அடிப்படையில் ஆஸ்திரேலியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்.

1) காஸ்டல் ஹில் 2) மெல்போர்ன் பேர்விக் 3) கேன்பரூ 4) பேனர்த் 5) மெல்போர்ன் லான்ங் வாரன் 6) மார்ஸ்டன் பார்க் 7) அடிலாய்டு சவுத் 8) பிரிஸ்பேன் லோகன் 9) பிரிஸ்பேன் 10) பிளம்ப்டன்

தனி நபர் விகிதாச்சார அடிப்படையில் தஸ்மானியா, கேன்பர்ரா, காஸ்டல் ஹில், டார்வின், மார்ஸ்டன் பார்க், மெல்போர்ன் பெர்விக், சிட்னி சிட்டி, பெர்த், கேம்ப்பேல் டாவுன், பீராமாட போன்ற ஜமாஅத்துகள்.

பொருள் தியாகம் செய்த இந்த அனைவரது செல்வத்திலும் உயிரிலும் அல்லாஹ் அபிவிருத்தியை வழங்குவானாக. பயணத்திற்குப் பிறகு அங்குள்ள நிலைமைகளை எடுத்துக் கூறுவேன் என்று மக்கள் எண்ணியிருப்பார்கள். இன்ஷா அல்லாஹ் அடுத்த குத்பாவில் எடுத்துரைப்பேன்.

## "அல்ஹகம் பத்திரிகை வெளியீடு"

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஜமாஅத்தின் **"அல்ஹகம்"** என்னும் முதலாவது ஆங்கில வாரப்பத்திரிகை வெளியீட்டை 23.03.2018 அன்று பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை குத்பா உரையை நிறைவேற்றியபின் Online ல் தொடங்கி வைத்தார்கள். அதன் இணையதளம் மற்றும் அப்ளிகேஷனை தொடங்கி வைத்தன் மூலம் www.alhakam.org உடனே நேரடியாக முழு உலகிலும் வியாபித்தது.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், அப்பத்திரிகையின் முதல் பிரதியை நகர்த்திப் பார்த்தபின், **அல்லாஹ் தனது அருட்கொடைகளைப் பொழிவானாக** என்று கூறினார்கள்.

அல்ஹகம் வெளியிடப்படும் இந்நாள் அது பெறும் இரண்டாவது அருளாகும். முதலாவது அருள், ஹுஸூர் அவர்கள், வெள்ளிக்கிழமை குத்பா உரையின் இறுதியில் அல்ஹகம் ஏட்டின் மறுபதிப்பு பற்றி இவ்வாறு அறிவித்திருந்தார்கள்:

**"இன்று இந்த அறிவிப்பும் இருக்கின்றது. இது ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும். காதியானிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த அல் ஹகம் பத்திரிகை மீண்டும் 1934 –ல் வெளியிடப்பட்டது. பிறகு மீண்டும் அது நிறுத்தப்பட்டு விட்டது. இன்று ஆங்கில மொழியில் அது இங்கிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றது.**

**இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் வெளிவந்த முதல் பத்திரிகையாக இருந்தது.... குத்பாவிற்குப் பிறகு www.alhakam.org என்ற இந்த Website –ல் அது உங்களுக்கு கிடைக்கும். இவ்வாறே Mobile Phone மற்றும் Tablets போன்றவற்றிற்கு Alhakam என்ற பெயரில் App –ம் கிடைக்கும். அதை Download செய்து பத்திரிகையை எளிதாக படிக்க முடியும். இந்த App புகழ்பெற்ற Mobile Phone System ஆன Apple மற்றும் Android –ல் Download செய்யும் வகையில் குத்பாவிற்குப் பிறகு உடனயாக உங்களுக்கு கிடைத்து விடும்.**

**இந்த இதழிலுள்ள பக்கங்கள் மஸீஹ் மவ்வூது தினம் தொடர்பான சிறப்பிதழாக வெளியிடப்படுகின்றது. இனி ஒவ்வொரு ஜுமுஆவிலும் புதிய இதழின் பதிப்பு Upload செய்யப்படும். பிரிண்டில் மிகக் குறைவான எண்ணிக்கையில் தான் இது வெளியிடப்படும். எந்நிலையிலும் மக்கள் இதிலிருந்து பலன் பெற முடியும். இம்முறை இது தொடர்ந்து நடந்து வருகின்ற ஒரு பத்திரிகையாக நீடித்திருக்கும்படி அல்லாஹ் செய்வானாக. இது ஆங்கில மொழியில் வெளியிடப்படுவதால் ஆங்கிலம் தெரிந்தவர்கள் இதிலிருந்து அதிகமதிகமாக பலன்பெற வேண்டும்"**

இதனை ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மிகுந்த அன்போடு எடுத்துக் கூறியவாறு துஆவுடன் இந்த website –ஐ அறிமுகம் செய்து வைத்தார்கள்.

அல்ஹகம் ஒரு Online வாரப்பத்திரிகையாகும். ஏராளமான நன்மைகளைக் கொண்டுள்ளது. அதன் முதலாவது பலன் என்னவெனில், அதனை உலகின் எந்த மூலையிலிருந்தும் பெற முடியும். மற்றொரு பலன், தகவல் தொழில்நுட்ப பிரிவினர் இதனைக்குறித்த புள்ளி விவரங்களை இங்கிருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், அல்ஹகம் துவக்கம் குறித்த அறிவிப்பு செய்தவுடன் நமது புள்ளி விவரங்களை சேகரிக்கும் அமைப்பினர் 10 நொடிப்பொழுதிற்கும் குறைவான நேரத்தில் இத்தளத்தை 400 நபர்கள் அணுகியிருப்பதைப் பார்த்துள்ளார்கள். முதல் 30 நிமிடங்களில் சுமார் 250 ஆண்டிராய்டு அப்ளிகேஷனிலிருந்து இது பதிவிறக்கம் செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

இதிலிருந்து இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இவை அனைத்தும் நமது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் அருளுக்குரிய துஆவினால் மட்டுமே நிகழ்ந்துள்ளது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஜுமுஆ உரையில் இது ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும் என்று கூறியதும் முழு ஜமாஅத்தும் அன்பிற்குரிய இமாமுடன் சேர்ந்து இந்த நற்செய்தியைக் கொண்டாடியது.

மேலும் அறிய: www.youtube.com/NewsMTA - (search "Launch of Al Hakam")

(செய்தி: அல்ஹகம் ஆங்கில வாரப்பத்திரிகை, இலண்டன் பதிப்பு, பக்கம்: 1 & 2, தேதி: 30.03.2018)

தமிழில்: செய்யது அன்வர் அஹ்மது, தூத்துக்குடி.

## காதியானில் 124 –வது ஆண்டு மாநாடு

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!**

**இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்குக் காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.**

**(நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது மர்கஸிய்யா, காதியான்)**

# சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஜெர்மனி சுற்றுப் பயணம் 2017

23 ஏப்ரல் 2017 ல் ஜெர்மனியின் செயற்குழு கூட்டத்தில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு செயலர்கள் செய்கின்ற பணிகளைப் பற்றி கேட்டு அவர்களுக்கு வழங்கிய வழிகாட்டல்கள்

(அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தஃப்ஸீர், இலண்டன்)

*(45 வது இதழின் தொடர்ச்சி...)*

அல்லாஹ்வும் இவ்வாறு கூறுகின்றான். நீர் மக்களிடம் கூறுவீராக! உமது காதுகளின் மூலமாக நீர் எவருக்கும் இழப்பை ஏற்படுத்தவில்லை. ஒருவரிடம் இருக்கின்ற சொந்த பகைமை அல்லது காழ்ப்புணர்ச்சியின் காரணமாக நீர் எந்த முடிவையும் எடுப்பதில்லை. மாறாக, ஜமாஅத்துடைய சிறந்த நிலையை கருத்தில் கொண்டே இப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதற்கு இறைவன் சாட்சி பகர்கின்றான். எனக்கும் எவரிடத்திலும் எந்தவொரு சொந்த பகையோ அல்லது காழ்ப்புணர்ச்சியோ நிச்சயமாகக் கிடையாது.

நான் விரும்புவதெல்லாம் ஜமாஅத் தன்னிடம் சீர்திருத்தத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஜமாஅத்திலுள்ள அனைவரிடமும் இந்த சீர்திருத்தம் ஏற்பட வேண்டும். இது மட்டுமல்ல. நான் இதை உங்களுக்குக் கூறுகின்ற போது சுயமே நானும் கூட அதிகமாக இஸ்திஃபார் செய்யக் கூடியவனாக இருக்கின்றேன். எனவே என்னைப் பற்றி ஏதாவது கூறுவதாக இருந்தால் நிச்சயமாக எனக்கு அப்படிப்பட்ட காதுகள் உள்ளன. அப்படிப்பட்ட காதுகள் எனக்கு இருப்பது மிக நல்ல விஷயமாக எனக்குத் தோன்றுகிறது.

ஏனென்றால் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நடைமுறைக்கு ஏற்ப செயல்படுகின்றேன். அல்லாஹ்வும் இந்த விஷயத்தை பாராட்டியே இருக்கின்றான். ஆனால் அபாயகரமான விஷயம் உங்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. இதுபோன்ற எண்ணங்களை உடையவர்களோடு அந்த அபாயம் தொடர்புடையதாக இருக்கின்றது. ஏனென்றால் நயவஞ்சர்கள் தான் இதுபோன்ற விஷயங்களை பேசியிருக்கின்றனர்.

எனவே பைஅத் செய்ததற்கான சரியான உரிமையை நீங்கள் செலுத்துபவர்களாக இருந்தால் பிறகு இதுபோன்ற எண்ணங்களை உங்களுடைய மூளையிலிருந்து வெளியேற்றி விடுங்கள். இங்கு எவருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய தேவை எனக்கு இல்லை. அவ்வாறு நான் பெயரை கூறப்போவதும் இல்லை.

ஆனால் யார் பேசியிருந்தாலும் சுயமே அவர் அதைப் பற்றி சிந்தனை செய்ய வேண்டும். மக்கள் பொறுப்பாளர்கள் தொடர்பாக விஷயங்களை எனக்கு எழுதுகின்றார்கள் என்றால் சிலர் தவறாகவும் எழுதுகின்றனர். அவர்களைப் பற்றியும் நான் விசாரணை செய்து வருகின்றேன். ஏதாவதொரு தலைமையக பொறுப்பாளர் தொடர்பாக முறையீடு வந்தால் அது பற்றி நான் விசாரணை செய்கின்றேன்.

ஆனால் யார் இந்த விஷயத்தை காலத்தின் கலீஃபாவிற்கு கூறியிருப்பார்? யார் இந்த முறையீட்டை கூறியிருக்கின்றார்? ஏன் இந்த முறையீட்டை செய்திருக்கின்றார்? என்றெல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டியது உங்கள் பணியல்ல.

நிச்சயமாக இது உங்களுடைய பணியே அல்ல. உங்களுடைய பணி சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதே ஆகும். அவ்வாறு நீங்கள் செய்யாமல் இருந்தால் இந்த வசனத்தில் குறிப்பிட்டுள்ள அந்த நபர்களைச் சார்ந்தவர்களாக நீங்கள் ஆகிவிடுவீர்கள். எனக்கு இது பெருமை சேர்க்கக்கூடிய விஷயமாகவே இருக்கின்றது. அதாவது நான் அல்லாஹ்வின் இந்த கட்டளைக்கு ஏற்ப செயல்படுகின்றேன். இந்த கட்டளைக்கேற்ப செயல்படுவது சுன்னத்தாக இருக்கின்றது. ஆனால் உங்களைப் பொருத்தவரை இந்த விஷயம் அபாயகரமானதாக இருக்கின்றது.

ஏனெனில் இது நயவஞ்சகர்களின் நடைமுறையாக இருந்து வந்திருப்பது இந்த வசனத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதிலிருந்து தவிர்ந்திருக்க நீங்கள் முயற்சி செய்யுங்கள். அவ்வாறு நீங்கள் முயற்சி செய்யவில்லையெனில் நிச்சயமாக இழப்பை சந்திக்க நேரிடும். அல்லாஹ் ஜமாஅத்திற்கு எந்நிலையிலும் முன்னேற்றத்தை வழங்குவான். ஜமாஅத் முன்னேறுவது மிக மிக அவசியமானதாகும் – இன்ஷா அல்லாஹ்.

ஜமாஅத் வளர்ச்சியடைந்து கொண்டே செல்லும். ஆனால் உங்களை நீங்கள் சீர்திருத்திக் கொள்ளாமல் இருந்தால் உங்களது இடத்தில் வேறு நபர்கள் வந்து விடுவார்கள். எனவே இப்படிப்பட்ட விஷயங்களைப் பேசுவதை விட்டுவிடுங்கள்.

அதாவது யார் இந்த விஷயத்தை காலத்தின் கலீஃபாவிற்கு எழுதினார். ஏன் எழுதினார்? என்றெல்லாம் கேட்பதை விட்டுவிடுங்கள். எங்காவது தவறு நிகழ்ந்திருந்தால் அதைச் சீர்திருத்த முயற்சி செய்யுங்கள். தவறு நடக்கவில்லை என்றால், அது பற்றிய விளக்கத்தை தெரிவியுங்கள். எனக்கு 10 இடத்திலிருந்து ஒரே விஷயம் வருகின்ற போது அதற்கு பிறகுதான் நான் அதைப் பற்றி விசாரணை நடத்தவே ஆரம்பிக்கின்றேன். ஒரு நபருடைய முறையீட்டை வைத்து நான் ஒருபோதும் எவரிடமும் எதையும் கேட்பதில்லை. அவ்வாறே தேவையில்லாமல் ஒருவர் முறையீட்டை கூறினாலும் அது பற்றியும் நான் விசாரணை நடத்துவதில்லை.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

எனவே ஜமாஅத்திலுள்ள பொறுப்பாளர்களுக்கு இது பற்றிய உணர்வு இருக்க வேண்டும். பொறுப்பாளர்களே காலத்தின் கலீஃபா மக்கள் கூறுவதை கேட்கிறார் என்று கூற ஆரம்பித்தால் பிறகு ஜமாஅத்திலுள்ள மற்ற மக்களிடம் அதன் தாக்கம் எப்படியிருக்கும் என்பதை பார்த்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக நான் மக்கள் கூறுவதைக் கேட்கின்றேன்.

அல்லது மக்கள் கூறுவதை கேட்காமலும் இருப்பேன். ஆனால் பைஅத் செய்ததற்கான உரிமையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கின்றது. அந்த பொறுப்பு என்னவென்றால் எனக்கு முழுமையாக கட்டுப்படுகின்ற முன்மாதிரியை நீங்கள் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.

**(நிறைவுற்றது)**

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 06 December 2018 Issue No. 49

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

சமயத்தில் அதனை நிராகரிக்கத் துணிந்து விடாதீர்கள். இது தக்வா என்னும் இறையச்சத்திற்குரிய வழி அல்ல. உங்களிடையே சில தவறுகள் உண்டாகாமலிருந்தால், நீங்கள் சில ஹதீதுகளின் பொருள்களைத் தவறாகப் புரியாதிருந்தால் தீர்ப்பு வழங்கக்கூடியவரான வாக்களிக்கப்பட்ட மஹீஸின் வருகையே வீணானதாக ஆகியிருக்கும். உங்களுக்கு முன்னால் நீங்கள் கற்றுக் கொள்வதற்குரிய ஒரு இடம் இருக்கிறது.

அதாவது எவ்விஷயத்தைப் பற்றி நீங்கள் வலியுறுத்தி வருகின்றீர்களோ மேலும் எந்த இடத்தில் நீங்கள் உங்கள் பாதத்தை வைத்து வருகிறீர்களோ அதே இடத்தின் மீதே யூதர்களும் கால் வைத்து வந்தார்கள். அதாவது, நீங்கள் எவ்வாறு ஹஸ்ரத் ஈஸா (அலை) மீண்டும் வருவார்கள் என்று காத்திருக்கின்றீர்களோ அவ்வாறே அவர்களும் இல்யாஸ் (அலை) மீண்டும் வருவார் என்று எதிர்பார்த்து வந்தனர்.

வானத்திற்கு உயர்த்தப்பட்ட இல்யாஸ் நபி மீண்டும் உலகத்திற்கு வந்த பின்பே மஸீஹ் வருவார் என்றும் மேலும் எவன் இல்யாஸ் மீண்டும் வருவதற்கு முன்னதாகத் தன்னை மஸீஹ் என்று வாதம் புரிவானோ அவன் பொய்யனாவான் என்றும் கூறி வந்தார்கள். அவர்கள் ஹதீதுகளின்படி மட்டும் இந்த எண்ணத்தைக் கடைப்பிடிக்கவில்லை. மாறாக, மலாக்கி நபிக்கு அருளப்பட்ட தெய்வீகக் கிரந்தத்தையும் இதற்கு ஆதாரமாக காட்டி வந்தார்கள்.

ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் யூதர்களின் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகத் தாம் தோன்றியிருப்பதாக வாதம் புரிந்த போது அந்த வாதத்திற்கு நிபந்தனையாக இருந்த இல்யாஸ் நபி வானத்திலிருந்து இறங்காத போது அந்த யூதர்களின் எல்லா நம்பிக்கைகளும் பொய்யாகிப் போனது நிரூபிக்கப்பட்டன.

மேலும் இல்யாஸ் பூத உடலுடன் வானத்திலிருந்து இறங்குவார் என்ற அந்த யூதர்களின் எண்ணத்திற்கு மாறாக இல்யாஸின் குணத்திலும் பண்பிலும் யாராவது வேறொரு மனிதரே வெளிப்படுவார் என்ற பொருளே இறுதியில் தெளிவாயிற்று. இப்பொருளையே நீங்கள் வானத்திலிருந்து மீண்டும் இறக்க விரும்பும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அளித்துள்ளார்கள்.

ஆகவே உங்களுக்கு முன் எந்த இடத்தில் யூதர்கள் தடுமாற்றம் அடைந்தார்களோ அதே இடத்தில் நீங்களும் ஏன் தடுமாற்றம் அடைகிறீர்கள்? உங்களது நாட்டில் ஆயிரக்கணக்கான யூதர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இப்போது நீங்கள் கொண்டிருக்கும் இதே நம்பிக்கை யூதர்களின் நம்பிக்கையாக இருக்கவில்லையா என்பதனை அவர்களிடம் கேட்டுப் பாருங்கள். ஆகவே இறைவன் ஹஸ்ரத் ஈஸாவுக்காக எலியா நபியை வானத்திலிருந்து இறக்கிக் கொடுக்கவில்லை.

எனவே, அதன் விளக்கத்தை யூதர்களுக்கு முன் வேறுவிதமாக விவரித்துக் காட்ட வேண்டிய நிலை அவருக்கு உண்டாகி இருக்கும் போது நீங்கள் மீண்டும் இறக்கவிருக்கும் ஈஸாவை மட்டும் அவ்விறைவன் உங்களுக்குக்எவ்வாறு இறக்கித் தருவான்? அவருடைய தீர்ப்பை நீங்கள் நிராகரிக்கக் கூடியவர்களாக இருக்கின்றீர்கள். உங்களுக்குச் சந்தேகம் இருக்குமேயானால் இலட்சக்கணக்கான கிறித்தவர்கள் இந்நாட்டில் இருந்து வருகிறார்கள். அவர்களது பைபிளின் புதிய ஏற்பாடும் இருந்து வருகிறது.

ஆகவே மீண்டும் வர வேண்டிய எலியா என்பவர் யோவானாகிய எலியாவே என்று ஈஸா கூறியது உண்மை இல்லையா என்பதனை அவர்களிடம் கேட்டுப் பாருங்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) இவ்விஷயத்தை வெளிப்படுத்தியதன் மூலம் யூதர்களின் பழைய நம்பிக்கையைத் தவிடுபொடியாக்கினார்கள். இப்போது ஹஸ்ரத் ஈஸா நபியோ வானத்திலிருந்து வரவேண்டியது அவசியமென்றால் அவர் உண்மையான நபியாக இருக்க முடியாது.

ஏனெனில் வானத்திலிருந்து திரும்பி வருவது இறைவனது நடைமுறைக்கு உட்பட்டது என்றால் இல்யாஸ் நபி மீண்டும் வராததேன்? மேலும் இந்த இடத்தில் யஹ்யாவை இல்யாஸாக தீர்மானித்து விவரிக்க வேண்டிய நிலை உண்டானதேன்? அறிவாளிகளுக்கு இது சிந்தனைக்குரிய ஒரு இடமாகும்.

---

☆ அடிக்குறிப்பு:– எந்த மனிதன் மனித சமுதாயத்தின் மீது கடுங்கோபத்தை வளர்ப்பானோ அவன் அக்கோபத்தினாலேயே அழிக்கப்படுவான். இதனாலேயே இறைவன் சூரா ஃபாத்திஹாவில் யூதர்களுக்கு மஃலூபி அலைஹிம் என்று பெயர் சூட்டியுள்ளான். ஒவ்வொரு குற்றவாளியும் கியாமத் என்னும் இறுதி நாளில் இறைவனது கோபத்தின் ருசியை நிச்சயம் சுவைத்துப் பார்ப்பான். ஆயினும் எவன் அநியாயமாக இவ்வுலகில் கோபப்படுவானோ அவன் இவ்வுலகிலேயே இறைவனது கோபத்தின் ருசியைச் சுவைத்து விடுகிறான் என்பதாக இதில் குறிப்பு உள்ளது.

இவ்வுலகில் யூதர்களை விடக் கிறிஸ்தவர்கள் மீது இறைவனது கோபம் உண்டாகவில்லை. இதன் காரணத்தால் ஃபாத்திஹா அத்தியாயத்தில் அவர்களுக்கு லால்லீன் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. லால்லீன் என்னும் சொல்லுக்கு இரு பொருள்கள் உள்ளன. ஒன்று அவர்கள் வழிகெட்டவர்களாவர். இரண்டாவது பொருள் இழந்து விடுபவர்கள் என்பதாகும்.

அதாவது ஏதாவதொரு சமயம் பொய்யான மதத்திலிருந்து இரட்சிப்புப் பெற்று இஸ்லாத்தில் மூழ்கி விடுவார்கள் என்பதும் மேலும் படிப்படியாக இணை வைக்கும் கொள்கைகளையும், குறைபாடுகள், வெட்கக்கேடான பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் விட்டு விட்டு ஏக இறைவனை வணங்கக்கூடிய முஸ்லிம்களாகி விடுவார்கள் என்பதும் இதன் விளக்கமாகும்.

எனது கருத்தில் இது அவர்களுக்கு ஒரு நற்செய்தியாகும். சுருங்கச் சொல்லின் ஃபாத்திஹா அத்தியாயத்தின் இறுதியில் வந்திருக்கும் லால்லீன் என்ற சொல்லின் லலாலத் என்பதற்கான இரண்டாவது விளக்கம் ஒருபொருள் மற்ற பொருள்மீது தன்னை அர்ப்பணிப்பதற்குச் சொல்லப்படுவதாகும். இது கிறிஸ்தவர்களின் இனி வரப்போதும் மார்க்க நிலையை குறித்த ஒரு முன்னறிவிப்பாகும் – நூலாசிரியர்.

**(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 61–73)**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad